பக்கங்கள்:-பன்னிரண்டு

*Registered as a News paper in Sri Lanka*

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா. 7.00

ராம்கோ சிமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஆனி 09 | புதன்கிழமை | (23.06.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 187

# கருணாவுக்கும் எனக்கும் தொடர்பு இருக்கிறது!

## பி.பி.ஸிக்கு அமைச்சர் டக்ளஸ் பேட்டி

(லண்டன்)

விடுதலைப் புலிகளினால் விலக்கப்பட்ட கருணாவுடன் தான் தொடர்பு வைத்துள்ளதாக இந்து கலாசார அமைச்சரும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

லண்டன் பி.பி.ஸிக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.அச செவ்வியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

கருணா ஜனநாயக ரீதியில் செயற்பட விரும்பியதாலேயே அவருடன் தொடர்பு வைத்திருந்ததாகவும் அவரை ஜனநாயக வழிமுறைகுக் கொண்டுவருவதற்கான முயற்சியில் தான் ஈடுபட்டுள்ளதாகவும் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து கருணா வெளியேற்றப்பட்ட பின்னர் அவருக்கு ஜனநாயக வழிமுறையில் ஈடுபடும் எண்ணம் வலுவாக உள்ளதாகவும் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து கொள்வதற்கு கருணா

(12ஆம் பக்கம் பார்க்க)

## போக்குவரத்து ஒழுங்கில் பொலிஸார் அதி தீவிரம்

(யாழ்ப்பாணம்)

போக்குவரத்து ஒழுங்குகளை நடைமுறைப்படுத்துவதில் பொலிஸார் தீவிர கவனம் செலுத்தியுள்ளனர்.

வாகன அனுமதிப்பத்திரம், சாரதி அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம் மற்றும் வரிச் சான்றிதழ் இல்லாது வாகனம் செலுத்துவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது.

நேற்று மாலை கொக்குவில் சந்தியில் வைத்து வாகனச் சான்

(12ஆம் பக்கம் பார்க்க)

# எதிர்க் கட்சியில் இருந்தாலும் அரசைக் கவிழ்க்க மாட்டோம்

## புதிய மகாநாயக்கரிடம் ஹக்கீம் உறுதி

(நமது நிருபர்)

**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், எதிர்க் கட்சியுடன் சேர்ந்து அவர்களுடன் நல்லுறவைப் பேணிவருகின்ற போதும் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்குத் துணைபோக மாட்டாதென முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் திகாமடுல்ல எம்.பியுமான ரவூப் ஹக்கீம் மல்வத்த பீடத்தின் புதிய மகாநாயக்கர் சங்கைக்குரிய திம்பட்டுவாவே ஸ்ரீசுமங்கல தேரரிடம் தெரிவித்துள்ளார்.**

மலவத்த பீடத்தின் புதிய மகாநாயக்கர் சங்கைக்குரிய திம்பட்டுவாவே ஸ்ரீசுமங்கல தேரரை நேற்று ரவூப் ஹக்கீம் சந்தித்துப் பேசிய போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு இரண்டு பிரதான கட்சிகளான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையே இணக்கப்பாடு

(12ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்ப்பு அரசியலை கைவிட்டு இணக்கப்பாடு காணவேண்டும்

### வர்த்தக கைத்தொழில் கூட்டுமன்றம் கோரிக்கை

(நமது நிருபர்)

தற்போதுள்ள இக்கட்டான அரசியல் சூழ்நிலையில் நாட்டின் எதிர்கால சுபீட்சத்தை கருத்தில் கொண்டு மாற்றுக் கருத்துக்களுடன் கூடிய எதிர்ப்பு அரசியலைக் கைவிட்டு இணக்கபபாட்டுடனான அரசியலைக் கடைப்பிடிக்குமாறு பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெற்றுள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களிடமும் வர்த்தக கைத்தொழில் சபையின் கூட்டு மன்றமும் வேலை கொள்வோர் அமைப்புகளும் வர்த்தக சங்கங்களும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

அண்மையில் பாராளுமன்றத்தில் இடம் பெற்ற விரும்பத்தகாத சம்பவங்களையடுத்து வர்த்தக கைத்தொழில் கூட்டுமன்றமும் வேலை கொள்வோர் அமைப்புகளும் வர்த்தக சங்கங்களும் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளன. அவ்வேண்டுகோளில் அவர்கள் மேலும் தெரிவித்திருப்பதாவது;

ஜனநாயகத்திற்குப் புறம்பான வகையில் அண்மையில் பாராளுமன்றத்தில் நடந்து கொண்டவர்கள் எவராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக சபாநாயகர் கடும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு.கொலைச் சம்பவங்கள்

# சந்தேக நபர்கள் எவரும் அடையாளம் காணப்படவில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரப் பகுதியில் அணமைக்காலங்களில் இடம் பெற்ற படுகொலைகள் மற்றும் கொலை முயற்சிச் சம்பவங்கள் தொடர்பான அடையாள அணிவகுப்பு நேற்று மட்டக்களப்பு நீதிமன்றத்தில் நடைபெற்றது.

இவ் அடையாள அணிவகுப்பின் போது சந்தேக நபர்கள் எவரும் அடையாளம் காணப்படவில்லை.

கடந்த மார்ச் மாதம் மூன்றாம் திகதிக்கும் 31ஆம் திகதிக்கும் இடையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை அடையாளம் காணவே இவ் அடையாள அணிவகுப்பு நடைபெற்றது.

ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் சின்னத்தம்பி சுந்தரம்பிள்ளை, தமிழரசுக் கட்சி வேட்பாளர் ராஜன் சத்தியமூர்த்தி அவரது மைத்துனர் தங்கையா கனகசபை, இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த வசந்த ஹொலம்பகே, விசேட புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஊழியர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண துணைவேந்தர் இணக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழக ஊழியர் சங்கத்தின் கோரிக்கைகளுக்கு சுமூகமாகத் தீர்வு காண்பதற்கு துணைவேந்தர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

யாழ.பல்கலைக் கழக ஆசிரியர் சங்கமும் மாணவர் ஒன்றியமும் துணைவேந்தரைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே இவ் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது.

ஊழியர்களின் கோரிக்கைகளுக்கு எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் உரிய நடவடிக்கை எடுப்பதாகத் துணைவேந்தர் உறுதியளித்துள்ளார்.

இதேவேளை பல்கலைக்கழக ஊழியர் சங்கத்திற்கும் நிர்வாகத்திற்கும் இணக்கத்தை ஏற்படுத்தி

(12ஆம் பக்கம் பார்க்க)

## பிந்துனுவெவ படுகொலை

# மரண தண்டனை விதிக்கப்பட்ட ஐந்தாம் எதிரிக்கு விடுதலை

(கொழும்பு)

பண்டாரவளை பிந்துனுவெவவில் புனர்வாழ்வு முகாமில் இடம் பெற்ற படுகொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த 5ஆம் எதிரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தப் படுகொலைகளின் பிரதிவாதிகள் நேற்று நீதிமன்றத்தில் தாக்குதல் செய்த மேன்முறையீட்டு மனுவினை விசாரித்த நீதிபதி 5ஆம் எதிரியான ரத்நாயக்காவை விடுதலை செய்தார்.

இவர் இப் படுகொலைச் சம்பவம் இடம்பெற்ற வேளை காவல் துறைப் பொறுப்பதிகாரியாக இருந்தார்.பிந்துனுவெவ படுகொலைச் சம்பவம் தொடர்பில் இரண்டு காவல் துறை அதிகாரிகள் உட்பட 5 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. தமக்கான மரண தண்டனையைச் சட்ட ரீதியற்றது

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியை சந்திக்க பிளேயர் மறுப்பு

(லண்டன்)

பிரிட்டனுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரிட்டன் பிரதமரைச் சந்திக்க எடுத்த முயற்சி பிரிட்டன் பிரதமரால் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பிரிட்டனுக்கான பயணததினை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சரை மட்டுமே சந்தித்தார்.

பிரிட்டன் பிரதமரை சந்திப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா வளாகத்தில் மாணவர்கள் பகிஷ்கரிப்பு

(வவுனியா)

தமக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு கோரி யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர்கள் நேற்றுத் தொடக்கம் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமக்கு நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்காக பம்பைமடுவில் தெரிவுசெய்யப்பட்ட இடத்தை வேறு இடத்திற்கு மாற்றுதல், விடுதிக் கட்டணங்களை 250 இருந்து 50 ரூபாவாகக் குறைத்தல, தமக்கென சொந்த வாகனம் ஒன்றைப் பெறுத்தரல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே அவர்கள் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை நேற்று நடைபெற்ற பகிஷ்கரிப்புப் போராட்டம் காரணமாக நிர்வாக அலுவலர்கள், விரிவுரையாளர்கள் எவரும் உள்ளே செல்ல மாணவர்களால் அனுமதிக்கப்படவில்லை. தமது கோரிக்கைகளுகக நிர்வாகம் உரிய பதிலைத் தராதவிடத்து தொடர் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக மாணவர்கள் தெரிவித்தனர்.

(ச)

## திருமணசேவை

O/L , A/L மேற்படிப்புப் படித்த மணமகள், மணமகன் தேவை. உடன் ஜாதகக்குறிப்பு, போட்டோ என்பவற்றுடன் தொடர்பு கொள்ளவும்.

குறிப்பு :- உங்கள் எதிர்காலப் பலன்களை அறிந்திடவும் திருமணப் பொருத்தம் பார்த்திடவும், எண்ஜோதிடம், ஜெனன ஜாதகம் கணித்திடவும் இன்றே விரையுங்கள். விலாசம் : நாகலிங்கம் கந்தையா, சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை. **T.P. No-** 071 2373401

(8602)

## திருமணசேவை

ஏரேமியான் திருமண சேவை. இ.துரைசிங்கம் உரிமையாளர், 39/2 மூத்தவிநாயகர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

கிளை:-இல.11,பருத்தித்துறை வீதி, நல்லூர் சிவன்கோவில் பின்புறம், யாழ்ப்பாணம்.

எம்மிடம் உளநாட்டு, வெளிநாட்டு **R.C,Non R.C** ,இந்துக்கள் போன்ற யாவருக்கும்திருமணம்செய்துகொள்ள தொடர்புகொள்ள வேண்டிய இடம் "ஏரேமியான் திருமண சேவை".

(C-270)

# ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ் தலைவராக பாலபட்ட பெண்டி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ் தலைவராக குசும்சிறி பாலபட்ட பெண்டி நியமிக்கப்படவுள்ளார். ஜனாதிபதியின் செயலாளரான இவரை மேற்படி பதவிக்கு நியமிக்க அரசாங்கம் எடுத்த முடிவு கம்பனிகள் சட்டத்தை மீறுவதாகவுள்ளது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கம்பனிகள் சட்டத்தின் 17வது இலக்க 181(1) பிரிவு (1982ஆம் ஆண்டின்) இன்படி 70வயதுக்கு மேற்பட்டவர்கள் பணிப்பாளர் சபையில் நியமிக்கப்படுதல் கூடாது. பாலபட்ட பெண்டியைத் தலைவராக நியமிப்பதற்கு அவசியமான மாற்றீடு நடவடிக்கைகளை விளக்குவதற்கு ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ் நிறுவனம் தனது பங்குதாரர்களை அழைத்துக் கடந்த 10ஆம் திகதி கலந்துரையாடியுள்ளது.

மாற்று நடவடிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக நிறுவனத்தின் செயலாளர் எம்.பிரிஸ் தெரிவித்தார். இதன்படி கம்பனிகள் சட்ட 17ஆம் இலக்க 181(1) ஆம் பிரிவின் படியான 70வயது எல்லை என்ற வரையறை பாலபட்ட பெண்டிக்கு வரையறுக்கப்படமாட்டாது எனத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது பாலபட்ட பெண்டியின் வயது 71. மேற்படி சட்டம் பாலபட்டபெண்டிக்குப் பிரயோகிக்கப்படமாட்டாது என்பதைப் பங்குதாரர்கள் ஏகமனதாக ஏற்றுக் கொண்டுள்ளனர்.

(உ-6)

# கைத்தொழில் நிறுவனங்களுக்கு உள்ளூர் பாதுகாப்பு உரிமம்

(யாழ்ப்பாணம்)

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் யாழ்ப்பாண உப பிராந்திய அலுவலகத்தினால் யாழ்.மாவட்டத்தில் அமைந்திருக்கும் கைத்தொழில, கைத்தொழில சபைகளுக்கு உள்ளூர் பாதுகாப்பு உரிமம் வழங்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இவ உரிமம் வழங்குவது தொடர்பான படிவங்கள் உளூராட்சி மன்றங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இப் படிவங்களைப் பூர்த்தி செய்து 09-07-2004ற்கு முன்னர் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் யாழ்ப்பாண உப பிராந்திய அலுவலகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

பாரியளவு மாசுபடுத்தும் கைத்தொழில் நிறுவனங்களுக்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபையும், குறைந்தளவு மாசுபடுத்தும் கைத்தொழில் நிறுவனங்களுக்கு உள்ளூராட்சி அதிகாரசபையும் சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-19)

# பலாலி விமானத்தளப் புனரமைப்பு

# இந்திய நிறுவன உதவி புறக்கணிப்பு

இந்திய நிறுவனத்தின் உதவியுடன் யாழ். பலாலி விமானத் தளத்தை மறுசீரமைப்பது என்ற திட்டத்தினை அரசாங்கம் கைவிட்டுள்ளது.

இதனையடுத்துத், தற்போது இவ் விமானப் படைத்தளம் உள்நாட்டு நிறுவனமான வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மறுசீரமைக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

பலாலி விமானத்தளத்தை மறுசீரமைப்பதற்கான உரிமையினை ஏற்கனவே பெற்றிருந்த குறிப்பிட்ட இந்திய நிறுவனம், தனது பணிகளை ஆரம்பிப்பது தொடர்பில் தொடர்ந்தும் காலம் தாமதித்து வந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், விமானத்தள மறுசீரமைப்புக்கான குறிப்பிட்ட இந்திய நிறுவனத்தின் செலவீனம் அதிகமாக இருந்ததன் காரணமாகவே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் சிறிலங்கா வான்படைத் தளபதி 'எயார் மார்சல்' டொனால்ட் பெரேரா தெரிவித்துள்ளார்.

இவ் விமானத்தளத்தை மறுசீரமைப்பதற்கு சுமார் 500 மில்லியன் ரூபா செலவாகுமென இந்திய நிறுவனம் தெரிவித்திருந்ததாகவும், இதே திட்டத்தினை 280 மில்லியன் ரூபா செலவில் செய்து தருவதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை தமக்கு ஆலோசனை வழங்கியதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதையடுத்தே, பலாலி விமானத்தள மறுசீரமைப்புப் பணியில் இந்திய நிறுவனம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் தொியவருகிறது.

(உ)

# பேனா வடிவத் துப்பாக்கியுடன் தப்பியோடிய சிப்பாய் கைது

(கொழும்பு)

படைத்துறையிலிருந்து தப்பியோடிய ஒருவரிடமிருந்து அதிநவீன பேனா வடிவிலான கைத துப்பாக்கி ஒன்றினை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இக்கைத துப்பாக்கி ரஷ்யத் தயாரிப்பான 2.2 ரகத்தைச் சோந்ததென, புத்தளம் பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இக்கைத்துப்பாக்கியினைப் பயன்படுத்தி இந்நபர் பல கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரிய வந்திருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

இந்நபரின் வீட்டில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது சுமார் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான திருட்டுப் பொருட்களைத் தாம் கைப்பற்றியுள்ளதாகவும் புத்தளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(உ)

# சட்டவிரோதமாக ஏற்றப்பட்ட மணல் பொலிஸாரால் பறிமுதல்

(காரைநகர்)

அனுமதியின்றி மணல் ஏற்றிக் கொண்டிருந்த 6 உழவு இயந்திரங்களை காரைநகர் பொலிஸார் கைப்பற்றி எச்சரிக்கை செய்து விடுத்துள்ளதுடன் மணலை அந்தப் பகுதி ஆலயங்களில் பறிக்குமாறு பொலிஸார் உத்தரவிட்டுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை காரைநகரில் இடம் பெற்றுள்ளது.

காரைநகர் வியாவிலில் தனியார் காணி ஒன்றில் சட்டரீதியான உரிய அனுமதிப்பத்திரமின்றி 6 உழவு இயந்திரங்களில் மணல் ஏற்றப்படுவதனை பொலிஸார் அவதானித்துள்ளனர். சம்பந்தப் பட்ட உழவு இயந்திர சாரதிகளிடம அனுமதிப்பத்திரங்கள் தொடர் பாக விசாரித்தபோது அனுமதி யின்றி மணல் ஏற்றப்படுவது தெரிய வந்தது.

உடனே 6 உழவு இயந்திரங்களும் மணல் ஏற்றப்பட்ட நிலையில் காரைநகர் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டன.

சம்பந்தப்பட்டவர்கள் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதனால் 6 உழவு இயந்திரங்களிலும் ஏற்றப்பட்ட மணலை ஆலயங்களில் பறிக்குமாறு உத்தரவிட்ட பொலிஸார் இனிமேல் இவ்வாறான சம்பவம் நடைபெறாவண்ணம் நடககும்படி எச்சரிக்கை செய்து விடுத்துள்ளனர்.

(உ-246)

# பல்கலை ஊழியர்களை சீண்டிப்பார்ப்பது போராட்டத்தை வலுவடையச் செய்யும்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கருத்து

(கொழும்பு)

யாழ்ப்பாணப பல்கலைக்கழகத்தில் எழுநதுள்ள நெருக்கடிகளுக்குப் பேச்சுவார்ததைமூலமே தீாவுகாண வேண்டும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக மேற்படி சங்கம் அறிக்கையொன்றையும் விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில்,

உயர்கல்வி நிறுவனமான யாழ். பல்கலைக்கழக ஊழியர்களினால் முன்வைக்கபபட்ட கோரிக்கைகள் ஏற்கனவே அடையாள வேலை நிறுத்தம மூலம் வெளியிடப்பட்டுப், பின்னர் ஒரு மாதகால அவகாசம் வழங்கப்பட்டும் பிரச்சினைகள் தீர்க்கபபடாதமையினால் தற்போது 2வது கிழமையாக நடைபெறும் வேலை நிறுத்தத்தைப் பேசுவார்த்தை மூலம் தீர்த்துவைக்காமல் பல்கலைக் கழக நிர்வாகம் அசமந்தப்போக்கைக் கடைப்பிடிப்பது தற்கால சூழ்நிலையில் பொருத்தமற்ற விடயமாகும்.

இப் போராட்டம் கல்வி உயர் கல்வி அமைச்சருக்கு எதிரானதோ, அல்லது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு எதிரானதோ அல்ல, இவை யாழ்.பல்கலைக் கழகத்தின் நிர்வாகத்திற்கு எதிராக நடாத்தப்படுவதாகும்.

அத்துடன பல்கலைக்கழக நிர்வாகம் தொழிற்சங்கப் போராட்டத்தின் தாற்பரியத்தை உணராமல் போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் சம்பளத்தை நிறுத்துவது அவர்களை வேலையிலிருந்து நீக்குவது ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்வது மேலும் போராட்டத்தை வலுவடையச்செய்யும்.

அது மட்டுமன்றி பல்கலைக் கழக ஊழியர்களின் போராட்டத்திற்கு ஆதரவாக ஏனைய தொழிற் சங்கங்களும் செயற்படும் நிலை உருவாகும் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ-10)

## பனை வெல்லம் உற்பத்தி

(பொன்னாலை)

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம் பெரிய விளானில் உள்ள தனது உற்பத்தி நிலையத்தில் பனை வெல்ல உற்பத்தியை ஆரம்பித்துள்ளது.

இந்த உற்பத்தி நிலையத்தின் மூலம் பதநீரிலிருந்து தரமான பனம் வெல்லத்தை மக்களுக்கு விநியோகிக்கக்கூடியதாக இருக்கும் என பனை தென்னை வள அபிவிருத்தி வட்டாரங்கள நம்பிக்கை தெரிவித்துள்ளன.(உ-49)

# நாட்டின் இறைமையைப் பாதுகாக்க வல்லோர் பலர் எதிர்க்கட்சியில் உள்ளனர்

## பிரதமர் மகிந்த உரை

(அனுராதபுரம்)

நாட்டின் இறைமையைப் பாதுகாக்க வேண்டும் என்ற ஆர்வம்



உளளவர்களும் ஜனநாயகத்தை நாட்டில் நிலைநாட்ட வேண்டும் என்ற நோக்கமுள்ளவர்களும் எதிரகட்சியில் உள்ளனர். எனவே அவர்களின் துணைகொண்டு நாட்டில் சிறநத சட்டமூலங்களை நிறைவேற்ற முடியும்.

இவ்வாறு அனுராதபுரத்தில் இடம்பெற்ற மாகாணசபை தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திடம் பெரும்பான்மைப் பலம் இல்லாவிட்டாலும் நாட்டிற்குப் பயன்தரக்கூடிய சட்ட மூலங்களை நிறைவேற்றுவதற்கான வழிவகைகளை அரசாங்கம் அறிந்து வைத்துள்ளது.

குறிப்பாக, எதிர்க்கட்சியில் நாட்டுப்பற்றுள்ள ஜனநாயக வாதிகள் அங்கத்துவம் வகிப்பதால் நாட்டின் நலனுக்குச் சாதகமாக அமையும் சட்டமூலங்களினை நிறைவேற்றும்போது அவர்கள் அரசின் முயற்சிக்கு ஆதரவளிப்பா என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

எனவே, ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி அரசின் நடவடிக்கைகள் குறித்து மக்கள் ஐயம் கொள்ளத் தேவையில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-4,62)

க.பொ.த.(சா.த) மாணவர்களே!
வலம்புரியில்
தொடர்ந்து பயிற்சி வினாத்தாள்கள்
வெளிவருகின்றன

உலக சுற்றுச் சூழல் தினம் ஜுன் –05



World Environment Day- June-05

எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

சூழல் பாதுகாப்புப் பகுதி
தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டு நிறுவனம் தமிழீழ
விடுதலைப்புலிகள் தமிழீழம்.

கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்

சட்டவிரோதமாகப் பயன்படுத்தப்படும் நீள்வரிசைத் தூண்டில் வலையின் ஆயிரக்கணக்கான வசிய இரைத் தூண்டில்களில் கொழுவி ஆண்டு தோறும் 300,000இற்கும் அதிகமான கடற்பறவைகள் பலியாகின்றன.

# பூரோக்கிண்ணம் – 2004

# இங்கிலாந்தும் பிரான்சும்

# கால் இறுதியில் நுழைந்தன

ஐரோப்பியக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப் போட்டியில் "B" குழுவிலிருந்து இங்கிலாந்தும் பிரான்சும் காலிறுதிக்குள் நுழைந்துள்ளன.

நேற்று லிஸ்பனில் நடைபெற்ற போட்டியொன்றில் குரோஜியாவுக்கெதிரான ஆட்டத்தில் நான்கு கோல்களைப் போட்டு இங்கிலாந்து அணி வெற்றிபெற்றது. வெயின் றூணி இரணடு கோல்களைப் போட்



டார். 1958ல் சுவீடனுக்கெதிரான உலகக்கிண்ணப் போட்டியில் பிறேசில் நட்சத்திரம் பீலே விளையாடிய ஆட்டததை றூணி விளையாடியதாக இங்கிலாந்துப் பயிற்றுநரும் 1958ல் சுவீடன் அணியில் விளையாடியவருமான செவன் கோரான் எரிக்சன் புகழ்ந்தார்.

இப் போட்டியில் குரோஷிய அணி இர்ண்டு கோல் களைப்போட்டது. இப் போட்டியில் அவ்வணி வெற்றி பெற்றிருந்தால் இங்கிலாந்து வெளியேற வேண்டியிருந்திருக்கும்.

மற்றுமொரு 'B' குழு ஆட்டத்தில் சுவிற்சர்லாந்தை




எதிர்த்தாடிய பிரான்ஸ் அந்நாட்டுக்கெதிராக மூன்று கோல்களைப்போட்டு வெற்றியீட்டியது. சுவிற்சர்லாந்து ஒரு கோளை மட்டுமே பெற்றது. 'B' குழுவில் ஏழு புள்ளிகளுடன் முந்நிலை வகிக்கும் பிரான்ஸ் இறுதிப்போட்டிக்குவரும் என்ற எதிர்ப்பார்ப்பு அந்நாட்டவர்களிடம் வெகுவாகக் காணப்படுகிறது. (யே)

# விம்பிள்டன் ரெனிஸ்- 2004

## 47 வயது நவரட்டிலோவா

## 19 வயது ஜெலினாவை வென்றார்

நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ள ரெனிஸ் வீரர்களின் "மெக்கா" என்று வர்ணிக்கப்படும் விம்பிள்டன் ரெனிஸ் போட்டிகளில் 47வயது மார்ட்டினா, நவரட்டிலோவா, 19



மார்ட்டினா

வயதான ஜெலீனா டொக்கியை வீழ்த்தினார்.

ஒரு காலத்தில் டெனிஸ் உலகின் வணாங்காமுடி என்று வர்ணிக்கப்பட்ட நவரட்டிலோவா ஒன்பது தடவைகள் விம்பிளடன் பட்டத்தை



வென்றவராவார். உலகின் நம்பர் வண் ஸ்தானத்தை அதிககாலம் கொண்டிருந்த அவர் தற்போது 700வது ஸ்தானத்திலிருக்கிறார்.

23 வது ஸ்தானத்திலிருக்கும் ஆர்ஜென்ரீன வீராங்கனை ஜெலினா டொக்கியை அவர் 6-3, 6-3என்ற செற்கணக்கில் வீழ்த்தினார்.

மூன்று வருடங்களுக்குப்பிறகு மீண்டும் விம்பிள்டனுக்கு வந்திருக்கும் மற்றொரு வீரரான கோரன் இவானிஸ்விக்கும் தனது முதலாவது போட்டியில் 31வது ஸ்தானத்திலிருக்கும் மிக்காயெல் யோகான்னிஸை வீழ்த்தினார். (யே)

# சுவிற்சர்லாந்துக் கிண்ணத்தை உல் றிச் வென்றெடுத்தார்

தற்பொழுது நடைபெற்றுவரும் சுவிஸ் சைக்கிள் ஓட்டப்போட்டிகளில் முன்னிணயில் திகழும் ஜேர்மன் வீரரான உல் றிச் சுவிற்




சர்லாந்து நோக்கிய தனது இறுதிச் சுற்றில் வெற்றி பெற்றுச் சம்பியனாகினார்.

31 நிமிடங்கள் 36விநாடிகளில் 25.6 கிலோமிற்றர் தூரத்தை அவர் கடந்தார். சுமார் ஒரு விநாடி நேர வித்தியாசத்தில் அவர் முதலிடத்தைப் பெற்றார்.

அடுத்தமாதம் நடைபெறவிருக்கும் பிரெஞ்சு சைக்கிள் ஓட்டப்போட்டிக்காகத் தன்னைத் தயார்படுத்தும் உல்-றிச்சுக்கு இவ்வெற்றி மிகுந்த உற்சாகத்தை வழங்கியிருக்கிறது. சுவிற்சர்லாந்தன முன்னணி வீரான பபியன் ஜெக்கரைத் தோற்கடிக்க அவர் கண்ணும் கருத்துமாகப் போராடினார். இறுதியில் அவர் தனது வெற்றியை உறுதிசெய்தார். (யே)

# சூமாக்கரைப் பின்பற்றிய வலன்ரீனோ ரோஸி

1996ஆம் ஆண்டு மிகப்பரபரப்பான வளர்ச்சியின்ஆரம்பக்கட்டத்திலிருந்த மைக்கல் சூமாக்கர் மிகுந்த பிரச்சனைகள் மத்தியில் பாரிய



வெற்றி ஒன்றை எதிர்பார்த்துக் காத்திருந்த இத்தாலிய அணியான "பெராரியில்" இணைந்தார் அப்போது அவரது எதிர்காலம் பற்றி ஐயம் கொண்டிருந்தவர்கள் ஒரு சிலரே!

இதனைப் பின்பற்றி மோட்டார் சைக்கிள் பந்தயங்களில் மிகுந்த பின்னடைவுகளை அனுபவித்துக கொண்டிருந்த யமஹா அணிக்கு லண்டனில் வசிக்கும் இத்தாலியரான வலன்ரீனோ ரோனியும் சென்றார். அதற்கு முன்னர் ஹொண்டா அணியுடன் தொடர்ச்சியாக மிகப்பெரும் மூன்று வெற்றிகளை அவர் பெற்றிருந்தார்.

2003ல் மோட்டார் சைக்கிள் பந்தயங்களில் நம்பர்வண் ஸ்தானத்தை அடைந்த ரோஸி இவ்வருடம் யமஹா அணியில் இருந்துகொண்டு அதன் வெற்றிகளை வலுப்படுத்துகிறார். மிகவும் கலகலப்பும் சினேகபூர்வமான வலன்ரீனானோவால் யமஹாவின் வெற்றிகள் அதிகரிக்கின்றன. (யே)

# கிராண்ட் பிறிக்ஸில் வென்ற முதல் ஜப்பானியர் சேட்டோ

அமெரிக்க போர்மியூலா வண் கிராண்ட் பிறிக்ஸ் கார்ப்பந்தயத்தில் மூன்றாவது இடத்தைப் பெற்றதன் மூலம், போர்மியூலா வண் பந்தய



மொன்றில் வெற்றி பெற்ற ஜப்பானியர் எனும் பெருமையை ரக்குமா சேற்றோ பெறுகிறார்.

ஜப்பானின் ஹொண்டா அணியில் இடம்பெற்ற சேற்றோவின் அதீத முன்னேற்றம் நமக்கு மிகுந்த திருப்தியளிப்பதாக ஹொண்டா நிறுவனத் தலைவர் ஒற்மா சாவ்னோர் தெரிவித்தார். கடந்த வருடம் வரைக்கும் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கிவந்த சேற்றோ பல முன்னணி வீரர்களைப் பின்தள்ளி முந்நிலைக்கு வந்திருப்பது ஜப்பானியர்களுக்கு மகிழ்ச்சியளித்துள்ளது.

இதே பாணியில் அவர் தொடர்ந்து முன்னேறுவதற்குரிய சகல உதவிகளையும் ஹொண்டா செய்யும் என்று அதன் தலைவர் ஒற்மா அறிவித்துள்ளார்.

(யே)

# விளையாட்டுச் செய்திகள்




ஒலிம்பிக்கிற்கு இன்னும் 51 தினங்கள்

# ஒலிம்பிக் வரலாறு 12

# 1952ல் ஹெல்சிங்கி நகரில் இடம்பெற்ற 12வது ஒலிம்பிக்

1912ஆம் ஆண்டிலிருந்து ஒதுங்கியிருந்த ரஷ்யர்கள் 1912ல் ஹெல்சிங்கியில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளுக்கு சோவியத் கொம்யூனிஸ ராட்சியத்தின் கீழ் முதன் முதலாக வந்து பங்கெடுத்தனர்.

கம்யூனிய நாடுகள் ஆதிக்கம் செலுத்திய இப் போட்டிகளில் முதலாளித்துவ நாட்டு வீரர்களுடன்



ஒலிம்பிக் கிராமத்தில் தங்குவதற்கு மறுப்புத் தெரிவித்த கம்யூனிஸ நாட்டு வீரர்கள் மாணவர் விடுதிகளில் தங்கினர்.

'செக் எக்ஸ்பிரஸ்' என்று அழைக்கப்பட்ட ராணுவ அதிகாரியான எமில் சந்றோபெக் 5000, 10,000, மற்றும் மரதன் போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்று தடகள தாரகையாக விளங்கினார். ஜிம்நாஸ்டிக் போட்டிகளில் சோவியத் ரஷ்யா ஆதிக்கம் செலுத்தியது. மரியா கொரக்கோங்ஸ்காய இரண்டு தங்கம் ஐந்து வெள்ளிகளை வென்று ஒரு போட்டியில் அதிக பதக்கம் வென்றவர் எனும் சாதனை நிலை நாட்டினார்.

ஏற்கனவே ஒலிம்பிக் போட்டிகளில் பிரபலமடைந்த இரு பிள்ளைகளின் தாயான ∴பன்னி பிளாஸ்கர்ஸ், 80மீற்றர் தடைதாண்டலில் இறுதி தடையில் கால்தடுக்கி விழுந்து தனது முதலிடத்தைத் தவறவிட்டார். கண்ணீருடன் வெளியேறிய அவர் அதன்பின்னர் போட்டிகளில் பங்குபற்றவேயில்லை.

சோவியத் ராஷ்யா முதற்தடவையாக இப்போட்டிகளில் முதலிடம் பெற்றபோது அமெரிக்கர்களுக்கும், முதலாளித்துவ நாடுகளுக்கும் பெரும் அதிர்ச்சியாகவிருந்தது.

(யே)

# மான் தோலுடன் குட்டிச் சாமியார் தலை மறைவு

(சேலம்)

சேலத்தில் கடந்தபல நாட்களாகப் பரபரப்பாக பேசப்பட்ட குட்டிச் சாமியார் மான் தோலை எடுத்துக் கொண்டு ஓடி விட்டதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

சேலம் அம்மாப் பேட்டையைச் சேர்ந்த பரனீதரன் என்ற 13 வயது சிறுவனை வைத்து அங்குள்ள சில கதா காலேட்சேபம் போன்ற நிகழ்ச்சிகளை நடத்தி வந்தனர்.

சிறுவன் வீட்டுக்கு வராததையடுத்துபெற்றோர் கடந்த வாரம் அவனை வீட்டுக்கு அழைத்து வர முயன்ற போது சிலர் அவனைக் கடத்திச் சென்றதாக பரபரப்புச் செய்திகள் வெளியாயின.

அப்போதிலிருந்து தினமும் ஏதேனும் ஒன்றைச் சொல்லி குட்டிச் சாமியாரைச் செய்திகளில் இடம் பிடிக்கச் செய்தவர்கள், அவனை மான் தோல் ஒன்றின் மீது உட்காரவைத்து பத்திரிகைப் புகைப் படங்களுக்கும் 'போஸ்' கொடுக்கச் செய்தனர்.


இந்த மான் தோல் ,மானைத் திருட்டுத் தனமாக வேட்டையாடி உரித்து வரப்பட்டது என்று புகார் எழுந்துள்ளது.

இதையடுத்து சேலத்தில் அவன் தங்கியிருந்த வீட்டை வனத் துறையினர் இரண்டு நாளாகச் சோதனையிட்டனர்.

சோதனைக்கு முன்பே மான் தோலைத் தூக்கிக் கொண்டு குட்டிச் சாமியார் தலைமறைவாகி விட்டார்.

மான் தோல் கைப்பற்றபட்டால் குட்டிச் சாமியார் மீது நடவடிக்கையெடுக்கப்படுமென்று வனத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

குட்டிச் சாமியாரை வைத்து கதா காலேட்சேபம் முதலியவற்றை நடத்தி வந்தவர்களும் இப்போது இருக்குமிடம் தெரியவில்லை.(து)




# நரேந்திர மோடி விவகாரம் முடிந்து போன விடயம்

## பா.ஜ.க. பொதுச் செயலாளர் அறிவிப்பு

(மும்பை)

இன்று முதல் 3நாட்கள் மும்பையில் நடைபெறும் பா.ஜ.கவின் தேசிய செயற்குழக் கூட்டத்தில் குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடியை மாற்றுவது பற்றி விவாதம் நடைபெறாது என்று கட்சியின் பொதுச் செயலாளர் பிரமோத் மகாஜன் கூறியிருக்கிறார்.

மும்பையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் ,குஜராத் முதலமைச்சர் பிரச்சினை குறித்து ஏற்கெனவே கட்சியின் ஆட்சி மன்றக் குழக்கூட்டம் விவாதித்து விட்டதால் அது முடிந்து போன விடயம் என்றும் ,இது சம்பந்தமாகப் பத்திரிகைகளுக்கு அறிவிக்கப்பட்ட முடிவு முன்னாள் பிரதமர் வாஜ்பாய் அனுமதியின் பேரிலேயே வெளியிடப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

தேசிய செயற்குழுவில் குஜராத் பற்றி விவாதிக்கப்பட்டாலும் கூட அது அந்த மாநிலத் தின் அரசியல் நிலை,தேர்தலில் பா.ஜ.க சந்தித்த முடிவு பற்றித் தான் இருக்குமென்றும் அவர் தெரிவிதார்.

தேர்தல் தோல்விக்கு கூட்டுப் பொறுப்பு உண்டு. யாரையும் தனிப்பட்ட முறையில் தண்டிக்க முடியாது என்றும் மகாஜன் கூறினார்.

விரைவில் நடைபெறவிருக்கும் சட்டப்பேரவைகளுக்கான தேர்தலில் பின்பற்றவேண்டிய யுத்திகள் குறித்து முக்கியமாக இக் கூட்டம் விவாதிக்கும் எனத் தெரிகிறது.

மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க. சந்தித்த முடிவுகள் பற்றி மாநில பா.ஜ.க. தலைவர்களிடம் இருந்து அறிக்கைகள் பெறப்பட்டு அந்த அறிக்கைகளை ஆய்வு செய்ய ஒருகுழு அமைக்கப்படும்.

இந்தக் குழு அளிக்கும் பரிந்துரைகளின் அடிப்படையிலும் தேசிய செயற்குழுத் தீர்மானங்கள் அடிப்படையிலும் மற்றுமோர் மாநாடு கூட்டப்பட்டு அதில் கட்சியின் யுத்திகள் வகுக்கப்படும் என்று ஏஜன்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன. (து)

# நடுவர் மன்றத் தீர்ப்பின்படி காவிரிநீர் தரப்பட வேண்டும்

(சென்னை)

பெரு மழை காரணமாக அபரிமிதமாக தண்ணீர் கர்நாடகத்தில் உள்ள காவிரி நீர்த்தேக்கங்களுக்கு தாராளமாக வரத் தொடங் கியதால் தமிழகத்திற்கு நீர் திறந்து விடப்பட்டதேயன்றிசட்டப் படியும் ஒபபந்தப்படியும் நடுவர் மன்ற இடைக் கால தீர்வுப்படியும் முறையாகக் கிடைக்கவேண்டிய தண்ணீர் கிடைக்க வேண்டும் என்று தி.மு.க தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

சென்னையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் இதைத் தெரிவித்துள்ள அவர் இடைக் காலததில் தமிழக அரசின் அணுகு முறை சரியில்லாமல் இருந்ததால் கேடு விளைந்தது.

இனிவரும் காலத்தில் இந்த நிலைஏற்படாமல் இருக்க கட்சிகள் அனைத்தும் ஒன்று பட்டு குரல் கொடுப்போம் எனத் தெரிவித்துள்ளார். (து)

# இந்திய–பாக். வெளியுறவு அமைச்சர்கள் சீனாவில் சந்திப்பு

(பீஜிங்)

இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங், பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் குர்ஷித் முகம் மத்கத்தூரியை நேற்று முன்தினம் சீனாவில் சந்தித்துப் பேசினார்.

இந்தப் பேச்சுக் குறித்துப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய நட்வர் சிங்,உடன்பாடான கண்ணோட்டத்துடன் தான் எல்லாப் பிரச்சினைகளையும் அணுகினோம் என்று கூறினார்.

இரு நாடுகளின் உறவையும் மேம்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகளை உறுதிப்படுத்த இருவரும் தொடர்பு வைத்திருப்பது என்றும் முடிவு செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (து)

# 2 காங். வேட்பாளர்களின் வேட்புமனு தள்ளுபடி அரசியல் நோக்கம் என்கிறது காங்கிரஸ்

(புதுடில்லி)

மாநிலங்களவைத் தேர்தலில் வேட்பு மனுக்களைத் திரும்பப் பெற நேற்று முன்தினம் கடைசி நாளாக இருந்த போதிலும் உத்திரப் பிரதேச தேர்தல் முடிவுகளைத தேர்தல் ஆணையம் நிறுத்தி வைதத்துள்ளது.

காங்கிரஸ் கட்சி வேட்பாளர்கள் இருவரின் வேட்பு மனுக்கள் அரசியல் நோக்கத்திற்காக தள்ளுபடி செய்யப்பட்டதாக அக்கட்சி தேர்தல் ஆணையத்திடம் புகார் செய்ததையடுத்து ஆணையம் இந்தமுடிவை அறிவித்தது.

காங்கிரஸ் கட்சியின் 9பேர் கொண்டதூதுக்குழு மத்திய தலைமைத் தேர்தல் ஆணையரைச் சந்தித்து இந்தப் புகாரைச் தெரிவித்தது.

அரசியல் நிர்ப்பந்தம் காரணமாக தங்கள் கட்சி வேட்பாளர் மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டதாக அவர்கள் புகார் செய்தார்கள். இதையடுத்து, தேர்தல் சம்பந்தமான ஆவணங்களை அனுப்பிவைக்கும்படி உத்தரப் பிரதேச தேர்தல் அதிகாரிக்கு மத்திய தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

காங்கிரஸ் வேட்பாளர் வந்த விமானம் தாமதமாகி தேர்தல் அதிகாரி நிர்ணயித்த காலவரையறைக்குள் அவர் மனுவைத் தாக்கல் செய்யாததால் அந்த மனு ஏற்கப்படவில்லை

உரியநேரத்தில் விமானம் வந்து சேராதபடி தடுக்கப்பட்டது என்று காங்கிரஸ் புகார் செய்ததையடுத்து அதுபற்றி விசாரணை நடத்தும்படி மத்திய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

தேவைப்பட்டால நீதி மன்றத்தில் வழக்குத் தொடரப்போவதாகவும் காங்கிரஸ் கட்சி கூறியிருக்கிறது.தற்போது உத்தரப்பிர தேசத்தில் பா.ஜ.க ஆட்சி நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (து)

**வீரபாண்டி ஆறுமுகம் மீதான சொந்துக் குவிப்பு வழக்கு.**

முன்னாள தி.மு.க அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் மீதான சொத்துக்குவிப்பு வழக்கு வரும் ஆகஸட் மாதம் 11ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

வீரபாண்டி ஆறுமுகம், மற்றும் குடும்பத்தார் ஏழு பேர் மீது இலஞ்ச ஒழிப்புப் பொலிஸார் இந்த வழக்கைத் தொடர்ந்துள்ளனர். சேலம் மாவட்ட முதன்மைக் குற்றவியல் நடுவர் மன்றத்தில் இவ்வழக்கு நடைபெற்று வருகிறது.

இவ் வழக்கு விசாரணைக்கு வந்தபோது வீரபாண்டி ஆறுமுகம், அவரது மனைவி லீலாவதி ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. (து)

# இந்தியச் செய்திகள்

## பரஸ்பர சட்ட உடன்படிக்கை எட்ட இந்தியா — ஜோர்தான் இணக்கம்

(புதுடில்லி)

குற்றவாளிகளை ஒப்படைப்பது தொடர்பாக ஒப்பந்தம் செய்து கொள்வதற்கான பேச்சு வார்த்தையில் ஈடுபட இந்தியாவும் ஜோர்தானும் ஒப்புக் கொண்டுள்ளன.

மேலும் பரஸ்பர சட்ட உதவி உடன்படிக்கையை எட்டவும் முடிவு செய்துள்ளன,

இது தொடர்பாக ஜோர்தான் தலைவர்களிடம் வெளிவிவகாரத் துறை அமைச்சர் ஈ அகமது ஆலோசனை நடத்தியள்ளார்.

தற்போதைய பிரதமர் பைசல் பின் அல்ஹுசேனிடம் இது குறித்து விவாதித்த அகமது பாலஸ்தீனத்துக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவு அளித்து வருவதையும் எடுத்துக் கூறியுள்ளார்.

இந் நிலையில் இந்தியாவில் குற்றம் செய்து விட்டு தங்கள் நாட்டில் புகுந்திருப்போரை மீண்டும் இந்தியாவிடம் ஒப்படைக்க ஜோர்தான் முன்வந்துள்ளது.இதேபோல ஜோர்தானில் குற்றம் செய்தவர்களையும் இந்தியா ஒப்படைக்கவுள்ளது.

மேலும் ஏராளமான பணிக்கு ஆட்களை அனுப்பும் ஒப்பந்தத்தை இந்தியாவுடன் செய்து கொள்ளவும் ஜோர்தான் விருப்பம் தெரிவித்துள்ளது. (உ)



பவானி சார்கர் அணையில் இருந்து பாசனத்திற்குத் திறந்து விடப்பட்ட1300 கன அடி நீர் கொடிவேலி அணைக்கு ஆர்ப்பாட்டத்தோடு வந்து சேர்ந்தது.

# மேட்டூர் அணைக்கு வந்துசேரும் நீர் குறுவைச் சாகுபடிக்குப் போதாது

(சென்னை)

கர்நாடகம் காவிரி நீரை விடுவித்ததையடுத்து மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் மாலை 25200 கனஅடிவீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையின் நீர் மட்டம் 43.25 அடியாக இருந்தது .

அணையின் நீர் மட்டம் ஒரே நாளில் சுமார் 3அடி உயர்ந்துள்ளது.

இந்தத் தண்ணீர் வரத்து தடையின்றி வந்தால் மேட்டூர் அணையின் நீரமட்டம் 3 வாரத்தில் 70 அடியாக உயரக் கூடும் என்று பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அணையின் நீர் மட்டம் 70 அடியை எட்டும் போதுதான் பாசனத்துக்கு அணையைத்திறக்க வாய்ப்பு ஏற்படும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனிடையே கபினி நீர் பிடிப்புப் பகுதிகளிலும் ஹாராங்கி, ஹேமாவதி, கிருஷ்ணராஜ சாகர்அணைநீர்பிடிப்புப் பகுதிகளிலும் மழை குறைந்து விட்டது. இதனால் மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவும்குறைந்து வருகிறது.


மேட்டூர் அணைக்கு கபினி நீர் வந்து சேர்ந்துள்ளபோதிலும் தஞ்சை டெல்டா பகுதி குறுவை சாகுபடிக்கு தற்போதைக்கு தண்ணீர் திறக்க வைப்பில்லை என்று அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கர்நாடகம் தமிழகத்திற்கு தரவேண்டிய தண்ணீரை தர வில்லை தற்போது வந்தது கபினியில் நிரம்பி வழிந்த உபரிநீர்தான். (து)

## மணிபல்லவத்தில் மஹோற்சவம்

## நயினை நாகபூசணி அம்மன் பாமாலை

### ஆறாம் திருவிழா



## அருள் புரிவாய் தாயே

ஆர்ப்பரிக்கும் அலைகடல் சூழ் மாண்புறு
நயினைநற் பதியினிலே உறையும்
நல்மலர் கொணர்ந்து நாகம் பூசித்த
ஆரணி உன் பாதக் கமலங்கள் சரண்

உள்ளமெல்லாம் சிதறுண்டுடைந்து
திக்கற்று நாமெல்லாம் குடியகன்று
உனைநாடிப் ப்ணிந்து தினமுமேற்றினோம்
பூரணி உன் கடைக்கண் பார்வை நாடி

வையகமெல்லாம் பரவி வாழும் அடியவர்நாம்
தேடி ஒடிஉன் திரு உலாக் காண
விரைந்து வந்து உன் தாள் பணிந்திட்டடோம்
நாகபூசணித்தாயே வாழ்வு செழித்திட அருள்வாயே

"நயினை விஜயன்"

## நலமது தருவாய் நாயகியே

ஆர்ப்பரிக்கும் கடலருகே அமர்ந்த நாகபூசணியே
ஆளுமிவ்வுலகு தன்னை கண்திறந்து பார்த்திடம்மா
ஆடி வரு மயிலினங்கள் ஒருங்கே கொண்ட பல்லவத்தில்
நாடி வரும் எம்மவர்க்கு நலமது தருவாய் நாயகியே

எண்ணெட்டு சக்தி பீடமதில ஒன்றாய் அமர்ந்தவளே
எமக்கு வரும் சஞ்சலத்தை சடுதியாக தீர்ப்பவளே
நயினைப்பதியுறையும் கர்பூர நாயகியே
நாடி வரும் எம்மவர்க்கு நலமது தருவாய் நாயகியே

ஓங்காரவடிவினன் நாயகற்கு அன்னையே
ஒய்யாரவடிவழகன் வேலனுக்கும் அன்னையே
நமது நாரயணன் சோதரியே பூசணியே
நாடி வந்து எமக்கு நலமது தருவாய் நாயகியே

**ம.பங்கயன்**
தும்பளை.

## சாந்தரூபியே தாயே!

ஐந்து தலை நாகமதின்
குடையின் கீழ் இருப்பவளே
நர்த்தகியே நாக பூசணியே
தாயே நயினையின் அம்மா
பூசிக்கிறோம் பூரிப்புடனேயே

கருணைச் சமுத்திரமாம்
காருண்ய நேத்திரமாம்
சரணம் பவித்திரையே
சந்நிதிக்கு வந்தோமே
சாந்தரூபியே தாயே

விநாயகனின் தாயும் நீ
வேலவனின் தாயும் நீ
காலமெல்லாம் தொழுகிறோம்
கவலையெல்லாம் போக்கியே நீ
கோலவாழ்வு தந்தருள்வாய்

**செல்லையா கண்ணன்**
நயினை 1ஆம் வட்டாரம்.

# தெருளர் கூட்டம் காட்டாமேல் செத்தே போனால் சிரியாரோ!

## (திருவாசகமணி க. மாணிக்கவாசகர்)

திருவாசகம், திருக்கோவையார் திருவாய் மலர்ந்தருளிய திருவாதவூரடிகள் என அழைக்கப்படும் மாணிக்கவாசகர் சுவாமிகளின் குருபூசை தினம் இன்றாகும்.

ஆனி மாதம் மாமகத்தில் மாணிக்கவாசகர் சிவனோடு அத்துவிதக்கலப்பெய்திய அற்புத நிகழ்வு திருவாதவூரடிகள் புராணத்தில்,



நின்ற புகழ் புலியூரார் நேர்மையுடன்
புடைசூழ
சென்றருளுக்கிடமான செம்பொன்னின்
அம்பலமெய்தி
ஒன்றிய இத்தமிழ் மாலையின் பொருள்
இவரென உரைசெய்து
மன்றில் கடிதேகி மறைந்தார் காண்
பலர் காண"

என்றும்,

"செய் காட்டும் கமுகடவித்
தில்லையுளார் பொருள் கேட்ப
கைகாட்டி தன்னுருவம்
காட்டா மறைந்தாரை
பைகாட்டும் பேரரவப்
பூணுடையோன் தமக்கன்பு
மெய்காட்டி பாலுடன்
மேவிய நீராகினார்"

என்றும் போற்றிப் புகழப்பட்டுள்ளது.

திருவாசகமும் திருக்கோவையாரும் மாணிக்க வாசகர் சொல்ல, தில்லைக்கூத்தர் எழுதிய பெரு மையும் பெருஞ்சிறப்பும் கொண்டனவாகும். "பாவை பாடிய வாயால் கோவை பாடுக" எனத் தில்லை நடராஜன் பணிக்க, மாணிக்கவாசகர் பாடினார் என்பதைத் திருவாதவூரடிகள் புராணத்தில்,

" மெய்த்தவ வாதவூரர் விரும்பி எழுதும் இவ் புத்தகம்
மன்றில் ஆடல் புரிந்தவன் எழுத்தாம் என்று
முத்தியை உதவும் கோவை முடிவிடத்துப் பின்
சித்திர மலர்க்கையாலே திருத்தமைக் காப்பும்செய்தான்"

என்றபாடல் எடுத்துக்காட்டுகிறது.

திருவாசகம் 51 பதிகங்களைக் கொண்டது. சிவபுராணம் முதல் அச்சோப்பதிகம் வரை 51 பதிகங் களையும மனனஞ்செய்பவர்கள் மரணமிலாப் பெருவாழ்வு வாழலாம்.

சைவசமயத் தலைவர்களாக இருப்பவர்கள் திருவாசக நிறைவு பெற்றிருத்தல் அழகாகும்; அவசியமாகும். "சைவனுக்கு அழகு திருவாசகம் படித்தல். அது ஏழேழு பிறவிகளுக்கும் உறுதுணையாய் நிற்கும்" என சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி முன்னாள் அதிபர் அமரர் சிவபாதசுந்தரனார் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

திருவாசகத்தின் 51 பதிகங்களையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து திருவாசகத்தின் பெருமையை அவனி யெங்கும் பரப்பியவர் ஜி.யூ.போப் பாதிரியார் ஆவார்.

திருவாசகத்தை நன்றாக அனுபூதிமார்க்கமாக அனுபவித்தது மாத்திரம் அல்லாமல், கிறிஸ்தவ தேவாலயங் களிலும் பாடும்பணி செய்தவர் அவர். அவரது பணியால் மேற்கத்திய நாடுகளுக்கும் திருவாசகத்தின் தேன் ஒளி பரவியது.

திருவாசகத்துக்கு அவர் ஆணித்தரமாக ஆங்கிலத்தில் விளக்கம் கொடுத்திருக்கிறார்.

**"There are a few poems in any language that can surpass Thiruvasagam, the holy word of lord manickavasagar in profoundity of thought, sinplicity in feelings child like admosphere finally finds its, shelter"**

சிவனும் சீவனும், தலைவனும் தலைவியும் பேரின்பப் புணர்ச்சியில் திளைத்தல் பற்றிய சிறப்பு இயல்புகளை எடுத்து விளக்குவதாக அமைந்துள்ள திருக்கோவையார் 25 பதிகங்களைக்கொண்டது. இயற்கைப் புணர்ச்சி தொடங்கி பரத் தைப பிரிவு வரை இது அமைந்துள்ளது. இவற்றில் முக்கியமானது 19ஆவது பதிகமான மணம் சிறப்புரைத்தலாகும்.

வாழ்க்கைக்கு (திருமணம்) உகந்தது போல பேரின்ப நிலை உடைத்தாக அதனை அமைத்திருக்கிறார். திருமணச் சிறப்பு ஒன்பது பிரிவுகளாகச் சீராக்கப்பட்டுள்ளது.

"மண முரசு கோரல் மகிழ்ந்துரைத்தல்
வழிபாடு, வாழ்க்கை நலம் கூறல்
காதல் கட்டுரைத்தல் கற்பறிவித்தல்
காதலர்கண் மருவுதல் கலவியுரைத்தல்
ஆகிய ஒன்பதும் நலமிகு மணமிசை யாகுங்காலே"

பேரின்பப் புணர்ச்சியின்பத்தைக் கூறும் போது, ஈருடல் ஓருயிர் என்பதைத் தெளிவாக்கியிருக்கிறார்.

" ஆனந்தவெள்ளத்தில் அழுந்துமோர்
ஆருயிர் ஈருருக்கொண்டு
ஆனந்த வெள்ளத்திடை திளைத்தால்
ஒக்கும்-அம்பலம் சேர்
ஆனந்தவெள்ளத் தறை கழலோன்
அருள் பெற்றவரின்
ஆனந்தவெள்ளம் வற்றாது
முற்றாது இவ் வணி நலமே!"

மாணிக்கவாசகருக்கு நாம் செய்யும் கைமாறு திருவாசகம், திருக்கோவையாரை அனுபவித்துத் சிவானுபூதியர்களாக வேண்டும். பேரின்ப நிலையை அடைந்திடவேண்டும்.

'வான் கலந்த மாணிக்கவாசக நின் மணி வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன் கலந்து நெய் கலந்து தித்திக்கும் பால் கலந்து
ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனித்ததுவே"
-இராமலிங்க சுவாமிகள்

வாதவூரானை மதித்தொருகால் ஒரு குருக்கள் என
ஞான பாதம் வெளியிட்டு நரியிற் குளுவை
வாதியாமென நடத்தும் அரசர் அன்புக்காக
மாடை ஆடை தர பற்றி முன் நகைத்து
வைகை ஆற்றின் மீது நடமிட்டு
மண்ணெடுத்து மகிழ்மாது வாணியொருபிட்டு
பித்தனருள் நுகர் கந்தவேளே"
-அருணகிரியார்

ஸ்ரீ மாணிக்கவாசகர் திருவடிகளே சரணம்


**அனுசரணை:- வி.எம்.கே. ஜுவலர்ஸ்**

# தரம்-5 புலமைப்பரிசில்
## பயிற்சி வினாத்தாள்

இல:09 ஆக்கம்: சுந்தர் வெளியீடு

♣ **1ஆம், 2ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள உருக்களிடையே மிக நெருங்கிய தொடர்பை உடைய இரண்டு உருக்களைக் குறிக்கும் எழுத்துக்கள் உள்ள விடையின் கீழே கோடிடுக.**

01.



1) Cஉம் Dஉம் 2) Eஉம் Bஉம் 3) Aஉம் Dஉம்

02.



1) Cஉம் Fஉம் 2)- Aஉம் Dஉம் 3) Bஉம் Eஉம்

♣ **3ஆம், 4ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள உருக்களிடையே ஒத்த இரண்டு உருக்களைக் குறிக்கும் எழுத்துக்கள் உள்ள விடை . யின் கீழே கோடு இடுக.**

03.



1) Cஉம் Dஉம் 2) Bஉம் Dஉம் 3) Aஉம் Dஉம்

04.



1) Aஉம் Dஉம் 2) Bஉம் Dஉம் 3) Bஉம் Cஉம்

♣ **5ஆம், 6ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள கூடுகளில் குறுக்காகவும், மேலிருந்து கிழாகவும் மூன்று எழுத்துக்களைக் கொண்ட சொற்கள் உருவாகும் வகையில் வெற்றிடத்திற்கு பொருத்தமான சொல்லை, எழுத்தைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

05.

| | | |
|---|---|---|
| ம | | கு |
| ப | | தி |
| க | | ரை |

1) த கு தி 2) த ர கு 3) த க் கு

06.

| | | |
|---|---|---|
| ம | | ம் |
| கு | | ம் |
| ப | | ம் |

1) ட 2) த 3) க

♣ **7ஆம், 8ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்களை வாக்கியங்களில் எவ்விதத்தில் பயன்படுத்தலாம் என்பதைக் குறிக்கும் விடையின் கீழே கோடிடுக.**

07. மரம், கதவு, சூரியன் 1) அடைமொழி 2)பெயர்ச்சொல 3) வினைச்சொல்

08. அடித்தான், படிப்பான், குடிக்கிறான்
1) வினைமுற்று 2) பெயர் அடை மொழி 3) எச்சம்

♣ **9ஆம், 10ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள வாக்கியங்களில் மிகச் சரியான கருத்துள்ள வாக்கியத்தின் கீழே கோடிடுக.**

09.
1) பெரியோர் சொல்கேட்டு நடத்தல் நன்று
2) பெரியோர் சொல்லக்கேட்டு நடத்தல் நன்று
3) நன்று பெரியோர் சொல்கேட்டு நடத்தல்

10.
1) இரக்கமற்றவர்களுடன் பழகுவது தவறு
2) இரக்கமில்லாதவர் பழக்கம் தவறு
3) இரக்கம் குறைந்தவர்களிடம் பழகுவது தவறு


♣ **11ஆம், 12ஆம் வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழே கோடிடுக.**

11. சிறுவன் ஒருவன் சரியான முறையில் கட்டிய பட்டத்தைக் கொண்டு சென்று பறக்க விட்டான். ஆனால், அது வானத்தில் பறக்கவில்லை. பட்டம் பறக்காமைக்குப் பொருத்தமான காரணம்.
1) பட்டம் சரியின்மை 2) அவனின் நண்பன் இல்லாமை
3) காற்று இல்லாமை


12. கமலன் நல்ல முயற்சியோடு படித்தும் கடந்த கால புலமைப் பரீட்சையில் சித்தியடைய முடியவில்லை. இதற்குக் காரணமாக இருக்கக் கூடியது.
1) பரீட்சையின் போது கமலனின் உடல் நிலை பாதிக்கப்பட்டிருந்தமை.
2) பரீட்சையின் போது கமலனினால் சரியான விடைகளை எழுத முடியாமல் இருந்தமை.
3) கமலன் நினைத்ததை விட வினாத்தாள் இலகுவாக இருந்தமை.

♣ **13ஆம், 14ஆம் வினாக்களின் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவை M குறிப்பிடும் திசை வழி பார்க்கும் போது அது தோன்றும்வதத்தைக் காட்டும் விடையின் கீழே கோடிடுக.**

13.




14.




♣ **15ஆம், 16ஆம் வினாக்களில் நான்கு நிகழ்வுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இங்கே ஒழுங்கு முறையில் மூன்றாவதாக வரவேண்டிய நிகழ்வைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

15. சிறுவன் பாடசாலை செல்ல ஆயத்தமாகின்றான்.
A. உடைகள் அணிந்தான். 1) A
B. காலை எழுந்தான். 2) B
C. உணவு உண்டான் . 3) D
D. கை, கால், முகம் கழுவினான்.

16. மாணவன் சுற்றுலாச் செல்வதற்கு பெற்றோரிடம் அனுமதி கேட்டான்.
A. தாயிடம் சுற்றுலா போவதாகக் கூறினான் 1) A
B. அப்பா அனுமதி கொடுத்தார். 2) C
C. ஆசிரியர் சுற்றுலாச் செல்வதாக மாணவர்களுக்கு கூறினார். 3) D
D. அப்பாவிடம் கேட்கும்படி கூறினார்.

♣ **17ஆம், 18ஆம் வினாக்களில் தரப்பட்ட சொல் வரிசையில் பொருத்தமற்ற சொல் இடம்பெறும் சொல் வரிசையின் கீழே கோடிடுக.**

17.
1) புத்தகம் கொப்பி கதிரை
2) ஓடுதல் இருத்தல் நடத்தல்
3) பாய் மெத்தை கட்டில்

18.
1) மேளம் மத்தளம் உடுக்கு
2) குறிஞ்சி முல்லை மருதம்
3) பணம் செல்வம் காசு

♣ **19தொடக்கம் 32வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் உரிய விடையின் கீழே கோடிடுக.**

19. திருவிழா ஒன்றில் பச்சை, சிவப்பு, நீலம், மஞ்சள் நிற மின்குமிழ்கள் முறையே 25 பூட்டப்பட்டன. இவற்றில் இறுதியாக உள்ள மின்குமிழின் நிறம் யாது?
1) பச்சை 2) சிவப்பு 3) நீலம்


20. வாழைக்குலை ஒன்றில் ஒன்பது சீப்பு பழங்கள் உண்டு. முதல் சீப்பில் 16 பழங்களும் மற்றைய சீப்புக்களில் ஒன்று ஒன்று குறைந்து காணப்பட்டது எனின் ஒன்பதாவது சீப்பில் எத்தனை பழம் உண்டு.
1) 10 2) 8 3) 12

21. என்னிடம் இரண்டு 5 ரூபா நாணயமும் தம்பியிடம் 2 ரூபா நாணயம் நான்கும் இருந்தால் மொத்தமாக எவ்வளவு பணம் உண்டு
1) 18 2) 5 3) 2

22. அடுத்தடுத்து 31 நாட்களில் முடியும் மாதங்கள் இரண்டும் எவை?
1) தை - பங்குனி 2) ஆடி - ஆவணி 3) தை - மார்கழி

23. நண்பர்கள் 10 பேர் தங்களுக்குள் வாழ்த்துமடல் பரிமாறிக் கொண்டனர். இவர்கள் ஒவ்வொருவரும் எத்தனை வாழ்த்துமடல்களை வைத்திருப்பார்கள்.
1) பத்து 2) பதினொன்று 3) ஒன்பது

24.




அருகில் காட்டப்பட்டுள்ள முக்கோணவடிவக் காணியின் சுற்றளவு யாது?
1) 9m 2) 18m 3) 12m

25. பட்டம் என்னும் சொல்  எனவும் கப்பம் என்னும் சொல்  எனவும் உருக்கள் மூலம் எழுதப்பட்டது. மருதம் என்ற சொல் தரும் உரு.

1)  2)  3) 

26. குருவி = 635 எனில் விருகு =
1) 356 2) 536 3) 563


27.





கமலன் கலா தம்பதியினரின் பிள்ளைகளை அருகே உள்ள வரைபில் காண்கிறீர்கள். இங்கு வதனி சாந்தனின் தங்கையாவார்.

மேல் கூறப்பட்ட அட்டவணையில் கமலன் - கலாவின் இளைய பிள்ளையின் பெயர் என்ன
1) வதனி 2) சாந்தன் 3) கண்ணன்


28. இம்முறி கோட்டின் படி மடித்து வெட்டினால் கிடைக்கும் வடிவம்





29. உரு A ஆனது தராசின் இரு பக்கமும் சமமாக உள்ள நிலையைக் காட்டுகின்றது. இதன்படி உரு B இல் உள்ள தராசை சமன் செய்ய சேர்க்க வேண்டிய உரு,





30. வெற்றிடத்திற்கு பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.




♣ **கீழே தரப்பட்டுள்ள தொடர்புகளுக்கு இலக்கங்களுக்குப் பதிலாக குறியீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. எல்லா உருக்களும் 10 இலும் குறைவான எண் பெறுமானம் உண்டு. அப்பெறுமானத்தை அறிந்து 31ம், 32ம் வினாக்களுக்கு விடை தருக.**



31. இவ்வுருக்களை அவற்றின் பெறுமானதிற்கேற்ப ஏறுவரிசைப்படுத்தினால் வரும் சரியான விடை




32. சரியான தொடர்பை காட்டும் விடையின் கீழ் கோடிடுக.




♣ **33ஆம் 34ஆம் வினாக்கள் பின்வரும் கூடுகளில் உள்ள இலக்கங்களையும் எழுத்துக்களையும் அடிப்படையாகக் கொண்டவை.**

33.

| | | |
|---|---|---|
| 2 | 6 | அ |
| ப | 2 | ச |
| 6 | 2 | 2 |
| 2 | 6 | க |

6களின் எண்ணிக்கை 2களின் எண்ணிக்கைக்குக் குறைவாகக் காணப்பட்டால் அ என்ற கூட்டில் x ஐ வரைக. கூடிக்காணப்பட்டால் க உள்ள கூட்டில் x வரைக.

34. இக்கூடுகளில் உள்ள 2 களின் கூட்டுத்தொகை 10 ஆயின் 'ச' உள்ள கூட்டில் x இடுக. இல்லை எனின் 'ப' உள்ள கூட்டில் x இடுக.

35.

| | | |
|---|---|---|
| 6 | 7 | |
| | 5 | |
| 8 | | 4 |

அருகேயுள்ள புதிரைப்பார்த்து மறைந்த இலக்கத்தைக் கண்டு பிடித்து கூட்டில் உள்ள இடைவெளியில் எழுதுக. (எல்லாப் பக்கமும் கூட்டினால்15 என்ற இலக்கம் வருதல் வேண்டும்.)

36.

| | | |
|---|---|---|
| 14 | 16 | 18 |
| 12 | | 8 |
| 2 | 4 | 6 |

வெற்றிடத்திற்குள் பொருத்தமான இலக்கத்தை எழுதுக.

♣ **37ஆம் 38ஆம் வினாக்களில் கோலத்தை அவதானித்து சரியான இடைவெளிக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

37.
A B
A B
A □
6 8

1) B
2) A
3) A B

**38. S.T.R. PM = 643.50 R.T.P. SR = □**

1) 354.36 2) 545.30 3) 345.63

♣ **குறிப்பிட்ட காலத்தில் ஓர் விளைநிலத்தில் விளைந்த நெல் மூடைகள் பற்றிய தகவல் தரப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| 1970 | 40 மூடை |
| 1975 | 60 மூடை |
| 1980 | 80 மூடை |
| 1990 | 120 மூடை |
| 2000 | |

39. 1965ஆம் ஆண்டு எத்தனை மூடைகள் விளைந்து இருக்கும்.
1) 40 2) 20 3) 30

40. 2000ஆம் ஆண்டு எதிர் பார்க்கப்படும் விளைச்சல் எவ்வளவு.
1) 120 2) 110 3) 140

# தரம்-5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

### வினாத்தாள் இல: 07

கூடிய புள்ளி ஒழுங்கில் மாணவர் பெயர் விபரம் வருமாறு:

1) க.லக்சன் - யா/கரவெட்டி மாணிக்கவாசக வித்.
2) பு.கேதீஸ்வரன் -யா/புனித மரியாள் வித்.
3) சி.ஜெதீசன் - யா/உசன் இராமநாதன் மகா வித்.
4) செ.கோகிலன்- யா/சங்கானை சிவப்பிரகாச ம.வித்.
5) ப.கல்யாணி - யா/வல்வை மகளிர் மகா வித்.
6) தி.சஜித்ரா - யா/தம்பசிட்டி மெதடிஸ் மிஷன் த.க.பா.
7) கு.நிலக்ஷன் - யா/பெரியபுலம் மகா வித்.
8) சோ.சோபிதாஸ் - யா/பெரியபுலம் மகா வித்
9) பா.ஜெயந்தன் - யா/பெரியபுலம் மகா வித்.
10) சி.ஆரணி - யா/சுண்டுக்குளி மகளிர் கல்.
11) பி.ஜோதிகா - யா/வதிரி சிவகுரு வித்தியாசாலை.
12) த.கௌரி - யா/வல்வை மகளிர் மகா வித்.
13) ஜெ. மயூரி ஜெயா - யா/வல்வை றோ.க.த.க. பாட.
14) நே.ஜோய்கர்ன் - யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்.
15) அ.சுபேதன் - யா/துன்னாலை காசிநாதர் வித்.
16) நா.நஜீவன் - யா/உடுவில் மகளிர் கல்.
17) கி.மகிழினி - யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாட.
18) கே.சிவரூபன்- யா/மத்திய கல்லூரி .
19) இ.கிருஷிசிகா -யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாட.
20) கி.கிறிஸ்ரிகா - யா/உசன் இராமநாதன் மகா வித்.
21) சி.கவிதா - யா/அராலி சரஸ்வதி மகாவித்.
22) ப.ஆதிரை - யா/இந்து ஆரம்பப் பாட.
23) சு.பிரதீபன் - யா/திரு இருதயக் கல்.
24) ஆன்டனியா - யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்.
25) சி.ஜெயக்குமார்- யா/வல்வை அ.மி.த.க.பாட.
26) த.நினுஜா - யா/நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்.
27) இ.தனுஷியா - யா/இந்து ஆரம்பப் பாட.
28) வி.குருநந்தனன் - யா/மத்திய கல்லூரி.
29) க.தயானா - யா/இந்து ஆரம்பப் பாட.
30) க.கிருஷ்யாயினி - யா/வட.இந்து மகளிர் கல்.
31) பு.லதுஷா - யா/இந்து ஆரம்பப் பாட.
32) ப.பிரவீனா - யா/நெல்லியடி மெ.மி.த.க. பாட.
33) சே.டிசோன் - யா/புனித பத்திரிசியார் கல்.
34) பா.பகிஷா - யா/மாதகல் விக்கினேஸ்வர வித்.
35) த.டினா - யா/உசன் இராமநாதன் மகா வித்.
36) மா.மயூரவதனி - யா/உசன் இராமநாதன் மகா வித்.
37) க.சுலக்சன் - யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாட.
38) சி.அனோஜன் - யா/உருப்பிட்டி அ.மி.கல்.
39) த.சீலன் - யா/நவாலி சென் பீற்றேஸ் றோ.க.த.க.பாட.
40) கி.நிருஷா - யா/நவாலி சென் பீற்றேஸ் றோ.க.த.க.பாட.
41) க.லக்ஷனா - யா/துன்னாலை காசிநாதர் வித்.
42) கி.சிந்துஜா - யா/இந்து ஆரம்பப் பாட.
43) கை.சுரேன் - யா/வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.
44) தெ.அனுஷா - யா/சங்கானை இஸ்தான அ.மி.த.க பாட.
45) வி.கல்யாணி - வல்வை றோ.க.த.க. பாட.
46) ஸ்ரீ.அபிராமி - யா/இந்து ஆரம்ப பாட.
47) ச.கௌசிகா - யா/சாவச்சேரி இந்து ஆரம்ப பாட.
48) சி.கிருஷ்ணபிரதாப் - யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்.
49) செ.தேனுகா - யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்.
50) ஜெ.சிப்போறா - யா/புனித ஜோன் பொஸ்கோ வித்.
51) இ.கிருபாகரன் - யா/துன்னாலை மேற்கு மெ.மி.த.க. பாட.
52) வி.முகுந்தன் - யா/நெல்லியடி மெ.மி.த.க. பாட.
53) ரா.திவாகர் - யா/வல்வெட்டித்துறை விநாயகர் வித்.
54) மா.கஜலக்ஷி - யா/இந்து மகளிர் ஆரம்ப பாட.
55) செ.கஜானன் - யா/உஷன் இராமநாதன் ம.வித்தி.
56) ம.கார்த்தீபன் - யா/உஷன் இராமநாதன் ம.வித்தி.
57) யோ.வசந்தா - யா/கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வித்தி.
58) சௌ. ராஜகுமாரி - யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை.
59) ச.அர்ஜுன் - யா/துனனாலை கிழக்கு அமிர்தாம்பிகை வித்தி.
60) செ.சாருஜா - யா/வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்.
61) கி.மடோன்எல்விஸ் - யா/உஷன் இராமநாதன் மகா வித்.
62) பா.கௌசிகன் - யா/உஷன் இராமநாதன் மகா வித்.
63) பா.சத்தியகுகன் - யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாட.
64) பூ.சாருஜன் - யா/புனித தெரேஸா மகளிர் கல்.
65) ஜெ.கிஷோபன் -யா/இந்து த.க. பாட.
66) சி.நிரோசன் - யா/யாழ்ரன் கல்லூரி.
67) மு.கஜீபனா - யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாட.
68) ப.பவித்திரா - யா/இந்து மகளிர் பாட.
69) ஆ.அனஸ்சித்ரா - யா/உடுவில் மகளிர் கல்.
70) பா.அனிதா - யா/வடமராட்சி இந்து மகளிர் கல்.
71) தி.ஆன்பிரவீனா - யா/நவாலி சென்பீற்றர்ஸ் றோ.க.த.க.பாட.
72) யே.ஜெருஷன் - யா/நவாலி சென்பீற்றர்ஸ் றோ.க.த.க.பாட.
73) ஸ்ரீ.சயீக்கா - யா/கன்னியர்மடம் மகளிர் ம.வித்தி.
74) ம.கோகிலன் - யா/சங்கானை சிவப்பிரகாச ம.வித்தி.
75) செ.பத்மப்பிரிஜா - யா/கரம்பொன் சிறியபுஷ்பம் ம.வித்தி.
76) ச.தர்ஷிகா - யா/சங்கானை சிவப்பிரகாச ம.வித்தி
77) ச.குணசுகி - யா/றோமன் க.த.க.பாட.
78) பு.விந்துஜா - யா/வல்வை மகளிர் வித்.
79) கி.கீதா - யா/வல்வை மகளிர் வித்.
80) கு.அரிதா - மாணவர் முன்னேற்ற நிலையம் சாவற்கட்டு.
81) வீ.திருக்குமரன் - யா/உடுப்பிட்டி அ.மி.கல்.
82) செ.பிரம்மிகா - யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தி.
83) ரா.கபில்ராஜ் - யா/தம்பசிட்டி மெ.மி.த.க.பாட
84) ந.வசிகாந் - யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தி.
85) ம.சுபரேகா - யா/ஆனைப்பந்தி றோ.க.பாட
86) ச.சர்மிளா - யா/உசன் இராமநாதன் மகா.வித்தி.
87) ஆ.சாம்பவி - யா/கந்தரோடை தமிழ் கந்தையா வித்தி.
88) நா.பகீர்ராஜ் - யா/திருநெல்வேலி இந்து த.க.பாட.
89) பி.நிந்துஜா - யா/நாவாந்துறை றோ.க.பாட.
90) சி.துளசிகா - யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வித்
91) செ.அனுசியா - யா/வல்வை மகளிர் மகா வித்.
92) ச.நித்தியா - யா/வல்வை மகளிர் மகா வித்.
93) பி.லக்ஷிகா - யா/வல்வை அ.மி.த.க. பாட.
94) வி.விதுஷன் - யா/வல்வை அ.மி.த.க. பாட.
95) செ.பிரதீஸ் - யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாட.
96) பா.பலாபத்மன் - யா/புற்றளை மகா. வித்தி.
97) தி.தட்சாயினி - யா/கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வித்தி
98) து.தபோஜன் - யா/இணுவில் மத்திய கல்.
99) த.திவாகர் - யா/துன்னாலை காசிநாதர் வித்.
100) அ.மோகன ரூபன் - யா/துன்னாலை காசிநாதர் வித்.
101) யோ.ஜெரோம் - யா/வதிரி திருஇருதயக் கல்லூரி.
102) சு.கீர்த்தனா - யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி.
103) ஜெ.ஜெயலதன் - யா/சங்கானை சிவப்பிரகாச ம.வித்தி.
104) யோ.ஜெறோசன் - யா/வதிரி திருஇருதயக் கல்லூரி.
105) சி.சிறிவிந்துஜன் - யா/இந்து ஆரம்ப பாட.
106) வி.பிரவீனா - யா/நீர்வேலி சி.சி.த.க. பாட.
107) பா.யாதவராஜ் - யா/கோப்பாய் நாவலர் த.வித்தி.
108) ச.நிவேதிகா - யா/இந்து ஆரம்ப பாட.
109) சி.தாரங்கா - யா/நவாலி சென் பீற்றர்ஸ் றோ.க.
110) ம.வனிதா - மாணவர் முன்னேற்ற நிலையம் சாவற்கட்டு.
111) கே.சுபாஸ்கரன் - யா/வதிரி திரு இருதயக் கல்லூரி.
112) ற.திஷானா - யா/உடுவில் மகளிர் கல்லூரி.
113) த.குருபரன் - யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்.
114) சு.திபாகரன் - யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்.
115) க. செல்வி - யா/வல்வை மகளிர் மகா வித்தி.
116) நா.விதுஷன் - யா/ஸ்ரீ சோமஸ்கந்தா கல்.
117) க.சியாமினி - யா/சங்கானை சிவப்பிரகாச ம.வித்தி.
118) சே.இந்துஷா - மாணவர் முன்னேற்றக் கழகம் சாவற்கட்டு.
119) கை.கௌசீகன் - யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்.
120) செ.சசிவரன்- யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தி.
121) ச.லமனா - யா/உரும்பிராய் சைவ.த.வித்தி.
122) ஆ.அஜந்தன் - யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க.
123) வ.இலர்ஷனா - யா/இந்து மகளிர் ஆரம்ப பாட.
124) த.யதுர்ஷன் - யா/பெரியபுலம் மகாவித்தி.
125) யோ.லோசுதன் - யா/மாணிக்கவாசகர் வித்தி.
126) ர.டிக்ஷான் - யா/சங்கானை சிவப்பிரகாச வித்தி.
127) வி.கிஸ்ணதீபா - யா/நயினை நாகபூசணி வித்தி.
128) சி.சஞ்சீவன் - யா/கோப்பாய் நாவலர் வித்தி.
129) நா.சங்கீர்த்திகா - யா/உசன் இராமநாதன் ம.வித்தி.
130) பி.துஷியந்தன் - யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்.
131) க.நிதர்சினி - யா/சங்கானை சிவப்பிரகாச வித்தி.
132) க.டிலக்ஷனா - யா/கொடிகாமம் திருநாவுக்கரசு வித்.
133) வ.கஸ்தூரி - மாணவர் முன்னேற்றக் கழகம் சாவற்கட்டு
134) ப.சதீஸ்குமார் - யா/இந்து ஆரம்ப பாட.
135) அ.கனிஸ்ரன் - யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாட.
136) யோ.விதுர்ஷன் - மாணவர் முன்னேற்றக் கழகம் சாவற்கட்டு.
137) அ.தனுசியன் - யா/இந்து ஆரம்ப பாட.
138) ஜீ.தனுஷியான் - யா/நவாலி சென் பீற்றர்ஸ் றோ.க.த.க.பாட.
139) எஸ்.மதுசூதனன் - யா/மாணிக்கவாசகர் வித்தி.
140) ச.கஜனி - யா/கோப்பாய் நாவலர் த.வித்தி.
141) செ.பர்சிகா - யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாட.
142) இ.சிந்துயா - யா/மானிப்பாய் சோதிவேம்படி வித்தி.
143) சோ.கோபிசாந் - யா/கோப்பாய் நாவலர் த.வித்தி.
144) பெ.ஜெயசாந் -யா/பெரியபுலம் ம.வித்தி.
145) கு.அருட்குமரன் - யா/வேதராணியேஸ்வரா வித்தி.
146) யோ.வேணுஷன் - யா/உஷன் இராமநாதன் ம.வித்தி.
147) பு.கீர்த்தனா - மாணவர் முன்னேற்றக் கழகம் சாவற்கட்டு.
148) வி.கஸ்தூரி - யா/வல்வை றோ.க.த.க. பாட.
149) ச.தனுசியா - யா/வல்வை றோ.க.த.க. பாட.
150) ச.பிரியசங்கீதா - யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்.
151) க.தபோதரன் - யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தி.
152) ச.அபிலாஷா - யா/ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாட.
153) த.தனறூபி - யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்.
154) அ.அஜித்தா - யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாட.
155) தி.சுகன்யா - யா/வேலணை கிழக்கு ம.வித்தி.
156) ம.யசிந்தா - யா/ஆனைப்பந்தி மெ.மி.பாட.
157) தி.செந்துஜா - யா/சாவகச்சேரி இந்து ஆ.பாட.
158) ஆ.ஆனுஸ்தா - யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாட.
159) சி.கனிஸ்ரா - யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாட.
160) செ.டுபின்ஷன் - மாணவர் முன்னேற்றக் கழகம் சாவற்கட்டு.
161) நா.சத்தியா - மாணவர் முன்னேற்றக் கழகம் சாவற்கட்டு.
162) சி.சரணிகா - யா/புன்னாலைக்கட்டுவன் அரசினர் க.பாட.
163) வி.ஜென்சி - யா/நவாலி சென் பீற்றர்ஸ் றோ.க.பாட.
164) வி.சதீஸ் - யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாட.
165) பு.வினஜா - யா/வல்வெட்டி விநாயகர் வித்.
166) சே.பெனாண்டோ - யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாட.
167) க.ஜசீபன் - யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்.
168) பா.நிதர்சன் - யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாட.
169) எஸ்.திருமகள் - யா/நவாலி சென் பீற்றர்ஸ் றோ.க.த.க. பாட.
170) அ.நிலோஜினி - யா/நவாலி சென் பீற்றர்ஸ் றோ.க.த.க.பாட.
171) ச.சத்தியா - யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தி.
172) ஜீ.ஜீவறூபிகா - யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாட.
173) வி.அனிஸ்ரா - யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாட.
174) ஜெ.பவதாரணி - யா/கோப்பாய் நாவலர் த.வித்தி.
175) யோ.நிக்ஷன் - யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாட.
176) பு,.டர்வின் - யா/ மெ.மி.வித்தி.
177) க.கனகசூரியா - யா/உஷன் இராமநாதன் ம.வித்தி.
178) யோ.சாருஜன் - யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்.
179) அ.மேரிகயேந்தினி - யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாட.
180) க.கர்ஜிகா - யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்.
181) ச.நிமல்ராஜ் - யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்.
182) லோ.கஜனா - யா/பண்டத்தரிப்பு மகளிர் உயர்தர பாட.
183) ஆ.சசிந்தா - மாணவர் முன்னேற்றக் கழகம் சாவற்கட்டு.
184) ச.சிவகாமி - மாணவர் முன்னேற்றக் கழகம் சாவற்கட்டு.
185) தெ.கனிஸ்ரன் - யா/கோண்டாவில் சி.சி.த.க. பாட.
186) சே.திவாகரன் - யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்.

## 5ம் தர புலமைப் பரீட்சை வினாத்தாள் –09

மாணவர் முழுப்பெயர்: ..........................................

பாடசாலை முகவரி : ..........................................

வீட்டின் முகவரி : ..........................................

மாணவர்களே! உங்கள் விடைகளை 28.06.2004 இற்கு முன் அனுப்பி வைக்கவும். உங்கள் விடைகளுடன் கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.

வலம்புரி
கல்விப்பகுதி,
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

குறிப்பு :- மாணவர்களின் நலன்கருதி இவ் வினாத்தாள்களை வைத்துக்கொண்டு, வினாக்களுக் கான விடைகளை வேறு ஒரு தாளில் எழுதி கூப்பனுடன் சேர்த்து அனுப்பவும். வினா இலக்கங்களை சரியாகக் குறிப்பிடவும். பாடசாலையின் பெயரினை முழுமையாக எழுதவும்.

## சுந்தர் வெளியீடு வினாத்தாள் 07 விடைகள்

### வினாத்தாள் I

01. (3)
02. (2)
03. (1)
04. (2)
05. (1)
06. (2)
07. (5)
08. (2)
09. (2)
10. (4)
11. (3)
12. (1)
13. (2)
14. (1)
15. 440m
16. 162.50
17. சிங்கம்
18. இந்துமதி, கர்ணன்.
19. பந்து, தேசிக்காய்
20. 120
21. 90
22. 120
23. 23
24. 72
25. M
26. ◆
27. மரியாதை
28. -
29. 3
30. 2
31. (3)
32. (2)
33. (2)
34. (3)
35. (2)
36. (1)
37. (4)
38. (2)
39. (4)
40. (2)

**குறிப்பு :**
அன்பு மாணவர்களே! உங்கள் புலமைப் பரிசில் பரீட்சைக்கான விடையை எழுதும்போது, விடைக்கான இலக்கங்களையும், பாடசாலையின் பெயரையும், உங்கள் பெயரையும் தவறாது எழுதுங்கள். எழுதத் தவறும் இடத்து உங்கள் பெயர் பிரசுரிக்கப்படமாட்டாது என்பதை மிகவும் வேதனையுடன் தெரிவிக்கின்றோம்.

## பெறுபேற்று சான்றிதழ்

(யாழ்ப்பாணம்)
கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி பெற்று 2003இல் இறுதித் தேர்வில் சித்தி பெற்றவர்களுக்கான சான்றிதழ் இன்று பி.ப. 3 மணிக்கு கலாசாலையில் வழங்கப்படும் என கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் அறிவித்துள்ளார். (உ)

## கண்காட்சி

(யாழ்ப்பாணம்)
கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் எதிர்வரும் வியாழன், வெள்ளி ஆகிய இரு தினங்களில் ஆரம்பக் கல்வி மன்றமும், நுண்கலை மன்றமும் இணைந்து கண்காட்சி நடத்தவுள்ளது.
நவீன கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைய புதிய கற்பித்தல், கற்றல் உபகரணங்களும் செயன்முறை பொருள்களும் ஆசிரிய மாணவர்களால் காட்சிப்படுத்தப்படவுள்ளன. (உ)

## கும்பாபிஷேகம்

(சாவகச்சேரி)
சாவகச்சேரி கல்வயல் ஸ்ரீ அம்பலவாணர் வீரகத்தி விநாயகர் தேவஸ்தான மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. (உ-29)

# திருவாசகம் தந்த மணிவாசகர்

மாணிக்கவாசகர் எனப் போற்றப படும திருவாதவூரரின் வரலாறு பொ்ய புராணத்தில் இல்லை.ஆனால் திருவாலவுடையாரின் திருவிளை யாடல் புராணம் ,பரஞ்சோதி முனி வரின் திருவிளையாடல் புராணம, கடவுள் மா முனிவரின் திருவாதவூரடி கள் புராணம் ,தல புராணங்கள் ஆகிய வற்றில் இடம் பெற்றுள்ளன.



பாண்டிய மன்னனுக்கு முத லமைச்சராக இருந்து "தென்னவன் பிரமராஜன்" என்னும் பட்டத்தைப் பெறறுப் போற்றப்பட்ட அருள ஞானி வாதவூர் குதிரைகள் வாங்குவதற்கு மன்னன் கொடுத்த பணத்தை குருந்த மரத்தடியில் இருந்த குருவினால் ஆட் கொள்ளப்பட்டு சிவ பணியில் செலவழித்ததால் அரச தண்டனைக்கு உள்ளானார்.

அவரின் துயாபோக்குவது போல் ஆவணி மூலத்தன்று காட்டில் உள்ள நரிகளை எல்லாம் குதிரைகளாக்கி அனுப்பினார் இறைவன்.

குறித்தவேளையில் குதிரை கள் வந்ததைக்கண்டு மகிழ்ந்த மன் னன் வாதவூரருக்கு தான் அளித்த தண்டனைக்காக வருந்தினார். ஆயி னும் அன்றிரவே குதிரைகள் மீண் டும் நரிகளாகி இடர் விளைவித்தன. வாதவூரர் மீண்டும் தண்டனை பெற வைகையாறு பெருக்கெடுத்தது. அத னால் பாண்டிய நாடே பாழாகும் நிலை உருவானது.

குடிமக்களே ஆற்றுப் பெருக்கை அணையிட்டுத் தடுக்க வேண்டு மென்ற அரச உத்தரவை நிறை வேறறுவதற்கு வந்தி என்ற மூதாட்டி ஆளில்லாமல் அவதியுற்றாள். அவ ளுக்கு உதவ கூலியாக இறைவனே வந்தான். அவள்கொடுத்த பிட்டினை கூலியாகக் கொண்டு மண சுமந்த பெருமான் குறித்த வேலையில் நாட்டம் இல்லாது இருந்ததால் அரசனின் பிரம் படிகது ஆளானான்.அவனுக்கு விழுந்த அடி அரசன் உட்பட அனைவருக கும் விழ கூலியாக வந்த இறை வன் மறைந்தான். வைகைக் கரையும் கட்டப்பட்டது. இறைவனின் இத் திரு விளையாடல் வாதவூரருக்காக நடந் தது என்பதை அறிந்த அரசன் அவரை சிவன் எனவே போற்றிப் பணிந்தான்.

வாதவூரரின் வாசகங்கள் மாணிக் கம் போல அழகாகஇருந்ததால் அவருக்கு மாணிக்கவாசகர் என்ற பெயர் உண்டானது. மாணிக் கவா சகர் பல அற்புதங்கள் செய்ததை யும் அவருக்காக இறைவன் பல அற் புதங்கள் செய்ததையும் காண முடி கின்றது. ஈழநாட்டு மன்னனோடு தில் லைக்கு வந்த புத்த துறவிகளுடன வாதிட்டு வென்று அவனின் மகளின் ஊமைத் தன்மையை மாற்றி அவள் மூலம் திருச்சாழல் என்னும் பதிகத்தைப் பாடிவித்து சைவத்தின் மேன்மையை நிலைநாட்டியவர் மாணிக்கவாசகர்.

திருப்பதிகள் பல சென்று அவர் பாடிய பாடல்களை தில்லைப்பதி யில் மீண்டும் பாடச்செய்து தன் கை யால் ஓலைச் சுவடியில் எழுதியவன் அந்தணராக வந்த இறைவனே. திருக் கோவையை பாடச்செய்ததும் அவனே. தான் எழுதிய ஏட்டுச்சுவடியில்"மாணிக் கவாசகன் சொல்ல சிற்றம்பலத்தான் எழுதியது" என ஒப்பமிட்டு மறைந் தது அவரின் திருப்பாடல்களின் பெரு மைக்குச்சான்றுபகிறது. ஏட்டுச்சுவடி பின்னர் தில்லைச் சிற்சபையிலுள்ள பஞ்சாட்சரப்படிகளில் இருக்கக் கண்ட தில்லைவாழ் அந்தணர் மாணிக்க வாசகரை அணுகி அதில் உள்ள பாடல் களில் பொருள் வேண்டி வணங்கி னர். அவர் பாடல்களின் பொருள் ஆடும் பெருமானின் அழகிய திருவ டிகளே என காட்டி அத் திருவடி ஒளி யில் இரண்டறக்கலந்தார். இவருடைய குருபுசை தினம் ஆனிமகம் ஆகிய இன்றாகும். ★

**தி. கிருபாகரன்**
**ஆசிரியர் யா/சுதுமலை**
**சிந்மய பாரதி வித்தியாலயம்**

## கழிவுப் பொருட்களைக் கொட்ட காணி பெற்றுக் கொடுக்க ஏற்பாடு

(கொழும்பு)

நகரப் பகுதிகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுப் பொருட்களை கொட்டுவதற்கென ஒவ்வொரு உள்ளூராட்சி மனறத்திற்கும் 5 ஏக்கர் காணியைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

நகரப் பகுதிகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்தக் கூடிய முறையான திட்டம் இல்லாத காரணத்தினால் பல் வேறு பிரச்சினைகள் எழுந்துள்ளதாகக் குறிப்பிட்ட அமைச்சர் தென்னக் கோன் கழிவுப் பொருட்களை அகற்றுவது தொடர்பாக அடுத்த மாதம் கொழும்பில் கூட்டம் ஒன்றை நடத்தப்போவதாகவும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளு மாறு சகல உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக் கப் போவதாகவும் கூறியுள்ளார். (உ-60,10)

# செய்தித் துளிகள்

## பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி தெற்குப் பேச்சியம்மன வருடாந்த பொங்கல் விழா எதிர் வரும் 26ஆம் திகதி வெள்ளிக் கிழமை இடம்பெறவுள்ளது. (உ)

## ஒலி,ஒளிப்பதிவு செயற்பாட்டறை

(பொன்னாலை)

சாவகச்சேரி மகளிர் கல்லூரி யில் ஒலி,ஒளிப்பதிவு செயற்பாட்டு அறை ஒன்று சுமார் ஒரு இலட் சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் நிறுவப்பட்டுள்ளது.

மேற்படி அறைக்கான நிதி யினை மாகாணக கல்வி அமைச்சு இரண்டாம் தரக் கல்வி மாதிரி முன்மாதிரித் திட்டத்தின்கீழ் வழங் கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-49)

## சட்ட விரோதமாக மணல் ஏற்றிய 10பேர்கைது

(யாழ்ப்பாணம்)

களவாக மணல் ஏற்றி வந்த 10 பேர் யாழ்ப்பாணம் சிறு குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

அனுமதி இல்லாமல் மணலைக் களவாடியமை,அனுமதிப்பத்திரம் இன்றி உழவு இயந்திரத்தில் ஏற் றிச் சென்றமை போன்ற குற்றங் களுக்காக முதல் 8பேருக்கும் தலா 10 ஆயிரம் ரூபாவும் மற்றைய இரு வருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா வும் தண்டப்பணமாக அறவிடப் பட்டது. (உ-19)

## வருடாந்தஉற்சவம்

(பொன்னாலை)

நவாலி அட்டகிரி கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம் மாகியுள்ளது.

தோ ,தீர்த்தத்திருவிழாக்கள் முறையே எதிர்வரும் 1,2 ஆம் திகதி களில் நடைபெறவுள்ளன.(உ-49)

## மாணிக்கவாசகர் குரு பூசை

(யாழ்ப்பாணம்)

வண்ணை நாவலர் மகாவித்தி யாலயத்தில் அமைந்துள்ள நால் வர் கோயிலில் இன்று மாணிக்கவா சகர் குரு பூசை விசேட அபிடேக ஆராதனைகளுடன் நடைபெறவுள ளது. (உ)

## ஆலயம் செல்லும் வீதி சேதம்

(துன்னாலை)

பருத்தித்துறை வல்லிபுர ஆழ் வார் கோயிலுக்குச் செல்லும் உபய கதிர்காம வீதி குண்டும் குழியுமாக பலத்தசேதமடைந்து காணப்படுகின் றமையால்,

ஞாயிற்றுக்கிழமைகளில் கோவி லுக்குச் செல்லும் நூற்றுக் கணக் கான மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (உ-50)

## இறை தியானம்

(கொழும்புத்துறை)

இளைஞர், யுவதிகளுக்கான இரண்டு நாள் இறை தியானம் ஒன்று எதிர்வரும் 29,30ஆம் திகதி களில் அருட்தந்தைபோல் மரி யன்னை பேராலயமண்டபத்தில் ரெபின்சனின் தலைமையில் நடை பெறவுள்ளது. (உ-51)

## கலந்துரையாடல்

(பொன்னாலை)

தமிழ்த்தேசியக் கூட்டமைப் பின் சாவகச்சேரித் தொகுதி ஆதர வாளர்கள் மற்றும் பொது அமைப புக்களின் பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 27ஆம் திகதி ஞாற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு தமிழத் தேசியக் கூட்டமைப்பின் யாழ மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் ந.ரவிராஜின் இல் லத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடல்களின் போது தென்மராட்சி பிரதேச அபி விருத்தி சமகால அரசியல் நிலை வரங்கள் சம்பந்தமாக கலந்துரையா டப்படவுள்ளது. (உ-49)


# மிதிவெடி அபாயக் கல்வி வாரம்

## யூன் 21 தொடக்கம் யூன் 27 வரை

எமது பிரதேசத்தை மிதிவெடியில் இருந்து மீட்கும்

மிதிவெடி அகற்றல் செயற்பாட்டிற்கு நாம் ஒன்றிணைந்து ஒத்துழைப்பு வழங்குவோம்.



- ☆ மிதிவெடி அகற்றுபவர்களினதும் மிதிவெடி அபாயக் கல்வித் திட்டச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களினதும் அறிவுரைகளைக் கேட்டு நடப்போம்.
- ☆ மிதிவெடி அகற்றுபவர்கள் அப்பிரதேசத்தை வைபவரீதியாகக் கையளிக்கும் வரை அப் பிரதேசத்தைத் தவிர்த்து நடப்போம்.
- ☆ மிதிவெடி அகற்றும் இடங்களிலுள்ள மிதிவெடி அபாயப் பலகைகள், நிறக் கட்டைகள் மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட வேறு பொருட்கள் அந்தந்த இடங்களில் இருப்பதை உறுதி செய்வோம்.
- ☆ எமது வளர்ப்புப் பிராணிகளான ஆடு,மாடு அப்பிரதேசத்தினுட் செல்வதைத் தடுப்போம்.
- ☆ விரும்பத்தகாத செயலில் ஈடுபடுவோருக்கு எம்மால் இயன்றள வற்கு அறிவுரைகளை வழங்கி அவர்களையும் ஆதரவு நல்கச் செய்வோம்.

**District Mine Action Office, Jaffna.**

(C/269)

**மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம், யாழ்ப்பாணம்.**

## இன்று ஒரு தகவல்

# குருவும் சீடனும்

ஒருஊரில் ஒரு பெரியவர் இருந்தார். அவர் ஒருகுரு. அவர் தொடர்ந்து தியானக் கூட்டங்கள் நடத்துவார். அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக பல ஊர்களிலிருந்து நிறைய சீடர்கள் வந்து செல்வார்கள்.

ஒருநாள் அங்கே கூட்டம் நடந்துகொண்டிருந்தபோது சீடர்களில் ஒருவன் எதையோ திருடிவிட்டான். மற்றைய சீடர்கள் அதைக் கவனித்துவிட்டார்கள். இவன் அகப்பட்டுக் கொண்டான்.

கூடடம் முடிந்த பிறகு இவன் திருடிய விஷயத்தை அந்தப் பெரியவரிடம் போய் சொன்னார்கள். ஆனால் அவர் இதைக் காதிலேயே போட்டுக்கொள்ளவில்லை. போய் சொன்ன சீடர்களுக்கெல்லாம் ஏமாற்றமாகிவிட்டது. 'என்ன இது இவ்வளவுதூரம் நாம் கண்டுபிடித்துப் பொய் சொலலுகிறோம் அவர் கண்டுகொள்ளவே மாட்டேன் என்கிறாரே' என்று ஒருமாதிரியாகிவிட்டார்கள்.

இருந்தாலும் அதைப்பற்றி ஒன்றுமே சொல்லிக் கொள்ளவில்லை.பேசாமல் இருந்துவிட்டார்கள். சிலநாடகள் கடந்த பின் அதேஆள் மீண்டும் ஒரு திருட்டில மாட டிக்கொண்டான் சீடர்கள் மறுபடியும் அந்தக் குருவிடம் விஷயத்தைச் சொன்னார்கள். அப்போதும் வழக்கம் போல் சும்மா இருந்து விட்டார்.

இவர் இப்படி இருப்பதைப் பார்த்ததும் அந்த சீடர்களுக் கோபம் வந்துவிட்டது. உடனே அந்த சீடர்கள் எல்லோரும் ஒன்றுகூடிப் பேசினார்கள். எல்லோரும் சேர்ந்து ஒரு விண்ணப்பம் தயாரித்தார்கள் அதைக் குருவிடம் கொண்டு போய்க் கொடுத்தார்கள்.

அந்தவிண்ணப்பத்தில் அவர்கள என்ன எழுதியிருந்தார்கள் தெரியுமா? "குருநாதர் அவர்களே! உடனே திருடியவன் மீது நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் அவனை இங்கே சேர்க்கக்கூடாது இந்த மடத்தைவிட்டே அவனை துரத்திவிட வேண்டும் நீங்கள் அவனை வெளியே அனுப்புங்கள். இல்லாவிட்டால் நாங்கள் அனைவரும் வெளியே போய் விடுவோம்' என்று எழுதியிருந்தார்கள்.

குரு அந்த விண்ணப்பத்தை வாங்கிப்படித்தப் பார்த்தார். அதற்குப் பின் அதை எழுதிய அனைவரையும் அழைத்தார்."எல்லோரும் இப்படிவாருங்கள்" என்றார். வந்தார்கள். "இப்படி உட்காருங்கள்" என்றார். அவர்கள் உட்கார்ந்தார்கள்.அதன் பின் இவர் சொன்னார் "இதோபாருங்கள். நீங்கள எல்லோரும்புத்திசாலிகள் உங்களுக்கு எது நல்லது எது கெட்டது என்பது நன்கு தெரியும் நீங்கள் மேற்கொண்டு ஏதாவது படிக்கவேண்டும் என்று நினைத்தால் போகலாம் அதற்கு நான் தடைசொல்லமாடடேன்.

ஆனால் உங்களால் குற்றஞ்சாட்டப்பட்ட அவனுக்கு நல்லது கெட்டது தெரியாது. அதனால் தான் திருடினான் நீங்கள் சொல்வதுபோல் அவனைத் துரத்திவிட்டால் அவனுக்கு எப்படி நல்லது கெட்டது தெரியும்? அவனுக்கு அதையார் சொல்லிக்கொடுப்பது? அதனால் இங்கேயே இருக்கட்டும் அதுதான் சரி. இதற்காக நீங்கள் எல்லோரும் என்னைவிட்டுப் போனாலும் சரி. அவனை நான் விரட்டமாட்டேன் என்றார.

இவ்வளவையும் திருடிய அந்த சீடன் கேட்டுக்கொண்டிருந்தான் அவன் கண்களில் கண்ணீ அப்படியே எழுந்து வந்து குருவின் காலில் விழுந்தான். அவன் கண்ணீரில் அவனது தீமை கழுவபபட்டது. சீடர்களுக்கு குருவின் பெருமை புரிந்தது.

ஒரு ஆசிரியர் இருக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். நன்கு படிக்கும் பையனுக்குத்தான் பாடம் சொல்லிக் கொடுப்பேன் என்றால் அது ஒரு பெரியவிடயமா? மோசமாகப் படிப்பவனையும் மாற்றிக்காட்டுவேன் என்பதுதான் பெருமை.

இந்தக் காலத்துக குருஒருவர் ஒரு ஆசிரமம் வைத்து நடத்திக்கொண்டுவந்தார்.நிறையப் பேர் தினமும் வந்து போவார்கள். ஒருநாள் ஒரு அவன் வந்து குருவின்முன் சென்று நின்றான். "ஐயா என்னை உங்கள் சீடனாக ஏற்கவேண்டும் என்றான்".குருநிமிர்ந்து பார்த்தார். "உனது நோக்கம் என்ன?'' என்று கேட்டார்." "ஐயா உங்களிடம் கொஞ்சநாள் இருந்தால் நல்லபழக்கவழக்கங்களைக் கற்றுக்கொள்ளலாம். அதன் பின் வெளியில்போய் ஒரு நல்ல தொழில் தொடங்கி வாழ்வில் முன்னேற வேண்டும் என்பதுதான்" என்றான். "நீசொல்வது சரி ஆனால் உன்னால் இங்கு நல்ல பழக்கவழக்கங்களை கற்க முடியாவிட்டால் என்ன செய்வாய்?" என்றார் இவர்."அப்படி நடந்தால் என்ன உங்களைப் போலவே ஒரு ஆச்சிரமம் தொடங்கி அதற்கு குருவாக இருப்பேன் என்றான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# மக்களின் எதிர்பார்ப்புக்களை அரசு பூர்த்தி செய்துள்ளது

## ஊடகத்துறை அமைச்சர் பெருமிதம்

(கொழும்பு)

ஆட்சிப் பீடத்தில் உள்ள ஐக்கிய மக்கள் சுதநதிர முன்னணி அரசாங்கம் குறுகிய காலத்தில் மக்களின் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்திசெய்வதில் வெற்றி கண்டிருப்பதாக ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

மக்களின் நன்மைகருதி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றி நேற்றுமுன்தினம் இடம்பெற்றசெய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் விபரித்தார்.

அவர்மேலும் கருத்துத் தெரிவிக்கையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு வழங்கிய வாக்குறுதிகளின் பிரகாரம் ஆயிரம் குளங்களைத் திருத்தியமைப்பதறகும் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புக்களை உடனடியாக வழங்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

உரமானியத்தை மீண்டும் வழங்குவது என்ற உறுதிமொழியும் அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்டுள்ளது. பாடசாலை சீருடைகளைத் நேரகாலத்தில் தயாரித்து வழங்குமாறு உள்ளூர் ஆடைத் தொழிற்சாலைகளுக்கு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

இதற்குத் தேவையான துணிவகைகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன. பாடசாலைப் பாடத்திட்டத்தில் வரலாற்றை ஒரு பாடமாக்குவது என்ற அரசாங்கத்தின் உறுதிமொழியும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அததியாவசிய் உணவுப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்தவும் விவசாயிகளின் வாழ்க்கை நிலையை உயர்த்தவும் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளன. இலங்கைப் போக்குவரத்தச் சபையை கிரமமான அடிப்படையில் அபிவிருத்திசெய்யவும போக்குவரத்துத்துறை சார்ந்த பிரச்சினைகளைத் தீர்க்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

முன்னர் ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக்கட்சி வர்த்தகர்களுக்கு வழங்கிய சலுகையான வரி மன்னிப்பின் விளைவாக இழக்கப்பட்ட பெருந்தொகையான பணத்தை மீளப் பெறுவதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.


நகர மற்றும் கிராமிய வீதிகளைப் புனரமைப்பதற்கென அரசாங்கம் 30 கொடி ரூபாவை ஒதுக்கியுள்ளது இவ்வாறு மங்கள சமரவீர தெரிவித்தார். (த-121)

# ஜனநாயக விரோதச் செயல்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழ வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் அழைப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக எதிர்க்கட்சித் தலைவர்களுடன் ஜனநாயகத்தை மதிக்கும் சகல அமைப்புக்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.



மாகாண சபைத் தேர்தலில் வட மத்திய மாகாணத்தில் போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்களைச் சந்தித்து உரையாற்றிய போதே ரணில் விக்கிரம சிங்க இதனைத் தெரிவித்தார்.

அவர் எங்கு தொடர்ந்தும உரையாற்றுகையில், பொதுத் தேர்தலின் போது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளுககு எதிராக அரசாங்கம் செயற்பட்டுவருகிறது. அத்துடன்,அரச ஊடகங்களையும் துஷ்பிரயோகம் செய்து வருகின்றது என்றும் குற்றஞ்சாட்டினார். (உ-61,10)

# இராசி பலன்

**23.06.2004**
**(ஆனி 09,புதன்கிழமை)**
**பஞ்சமி முற்பகல் 9.3 வரை**
**மகம் முன்னிரவு 7.03வரை**
**இராகுகாலம் 11.55-1.25 வரை**
**சுபநேரம் 4.25-5.55 வரை**
**குமார சஷ்டி விரதம்**
**மாணிக்கவாசகர் குரு பூசை**

**மேடம்**
அஜீரண ரோகம், காரிய இடையூறு, காரிய தாமதம், பணத்தட்டுப்பாடு.

**இடபம்**
தன்னம்பிக்கைக்குறைவு, தன விரயம், தொழில் கஷ்டம், முயற்சி தாமதம்.

**மிதுனம்**
மனோதைரியம், நற்கீர்த்தி, மாதர் நட்பு, முயற்சி கைகூடும்.

**கடகம்**
போசன சுகக் குறைவு, மனோ சங்கடம், பொருள்விரயம், அதிக செலவு.

**சங்கம்**
வெகுமானம், சயன சுகம், மன மகிழ்ச்சி, நல்ல முயற்சி.

**கன்னி**
சோம்பல் நிலை, பிறருக்கு கீழ்படிதல், சுப செலவு, காரிய தாமதம்.

**துலாம்**
குடும்ப சுகம், தனதானிய சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, முயற்சி கைகூடும்.

**விருச்சிகம்**
எடுத்த காரியம் கைகூடும் நன்கொடை, தேகரோக்கியம், தொழில் விருத்தி.

**தனுசு**
உத்தியோக பங்கம், வீண் பயம், தேசாந்திரவாசம், காரிய தாமதம்.

**மகரம்**
முழங்கல்வலி, கலகம்,பொருள் விரயம், உடல் நலக்குறைவு.

**கும்பம்**
மனோசௌக்கியம், கீர்த்தி,குடும்ப நன்மை, தடைப்பட்ட காரியம் கைகூடும்.

**மீனம்**
சந்தேஷமான சம்பவம், மாதம் நட்பு, காரிய அனுகூலம் ஆரோக்கியம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# வலுவிழந்தவர்களுக்கான விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சமுதாய மட்டத்திலான விசேட தேவையுடைய 18 வயதுக்குட்பட்ட வலுவிழந்தோர்களுக்கான விசேட கலநதுரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் புனருத்தாரண வேலைத் திட்டம் மற்றும் வலுவிழந்தோர்களுக்கான படிவங்கள் பூரணப்படுத்துதல் சம்பந்தமாக ஆலோசிக்கப்படவுள்ளதால சமூக சேவை உத்தியோகத்தர்கள்,பயிற்சி பெற்ற சி.பி.ஆர். தொண்டர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் சிவசுவாமி கேட்டுள்ளார்.

கலந்துரையாடல் மற்றும் பயிற்சி நெறியில் கலந்து கொள்ளும் சி.பி.ஆர்.தொண்டர்களுக்குப் பிரயாணச் செலவு வழங்கப்படும். (உ-19)

# களைபிடுங்கச் சென்ற சிறுமிகள் கடத்தப்பட்டு பாலியல் வன்புணர்வு

(மட்டக்களப்பு)

சம்மாந்துறைப்பகுதியில் இரண்டு தமிழ்ச் சிறுமிகள் பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

14,15 வயது மதிக்கத்தக்க இவ்விரு சிறுமிகளும் தமது பாட்டியுடன் சம்மாந்துறை பிரதான வீதியில் நின்றவேளை ஆட்டோவில் வந்த மூன்று முஸ்லிம் நபர்கள் தமது வயலில் களைபிடுங்க வருமாறு கூறி ஆட்டோவில் ஏற்றிச் சென்றனராம்.

சிறிது நேரம் சென்றதும் மூதாட்டியை இறக்கிவிட்டு இருவரையும் ஒரு மலைப் பிரதேசத்திற்குக் கொண்டு சென்று பாலியல் வன்புணர்வு புரிந்துள்ளனர்.

அங்கு வந்த பொது மக்கள் சிறுமிகளின் நிலையை அறிந்து இருவரையும் அம்பாறை மாவட்ட வைத்திய சாலையில் அனுமதித்தனர். தற்போது இருவரும் அம்பாறை மாவடட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதாகக் தெரிவிக்கப்படுகிறது. (உ-121)

# அமெரிக்க பாதுகாப்புச் செயலரின் வதைக்குறிப்புக்கள் வெளியாகும்

(வாஷிங்டன்)

கியூபாவின் குவான்டனாமோ சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கும் பயங்கரவாதச் சந்தேக நபர்கள் மீது நடாத்தப்படும் சித்திரவதைகளுக்கு அமெரிக்கப் பாதுகாப்புச்செயலர் ராம்ஸ் பீல்ட் அங்கீகாரமளித்து வழங்கிய குறிப்புக்களின் விபரங்களை பென்ரகன் வெளியிடவிருக்கிறது.



கைதி ஒருவரை விசாரிக்கும் முகமாக அவரை நான்கு மணித்தியாலங்கள் நிற்க வைப்பது மற்றும் நீரில் மிதக்கவிட்டு அவரை மூழ்கடிக்கப் போவதாகப் பயமுறுத்துவது உட்பட மேலும் சில சித்திரவதைகளுக்கு பாதுகாப்பு அமைச்சர் அனுமதி வழங்கினார் எனும் ரூற்றச்சாட்டுக்கள் மனித உரிமைகள் ஆர்வலர்களாலும்,அமெரிக்க சிவில் நிர்வாகத்தாலும் விடுக்கப்பட்டதைத் தொடர்ந்து இம்முடிவைப் பென்ரகன் எடுத்துள்ளது.

கைதிகள் தொடர்பான ஜெனீவா ஒப்பந்தத்தை அமெரிக்கா மீறுவதாகவும் சித்திரவதைகளுக்கு ஜனாதிபதியும் பாதுகாப்பு அமைச்சரும் அனுமதி வழங்குகின்றனரா என்ற கேள்வி உலகெங்கும் பரவலாக எழுப்பப்படுகிறது.

இது குறித்துப் பத்திரிகையாளர்களின் காரசாரமான கேள்விகளுக்குப் பதில் கூறிய ராம்ஸ் பீல்ட், அல்குவெய்டா அங்கத்தவர்களுக்கும் தலிபான் களுக்கும் ஜெனீவா ஒப்பந்தம் பொருந்தாதுஎன்றார்.

(யே)

# ரைபூன் புயற்காற்றால் ஜப்பானில் பாரிய சேதம்

(டோக்கியோ)

கிழக்காசிய கடற்பிரதேசத்தில் வீசும் ரைபூன் புயற்காற்று ஜப்பானைத்தாக்கியதில் மூன்றுபேர் உயிரிழந்ததுடன் நூற்றுக் கணக்கான குடும்பங்கள் வீட்டைவிட்டு வெளியேறியதுடன், ஆயிரக்கணக்கான வீடுகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.



ஜப்பானின் ஒக்கினாவா பிரதேசத்தில் இரண்டுபல்கலைக்கழக மாணவர்கள் கடலலைகளில் அடித்துச் செல்லப்பட்டதோடு, இன்னுமொருவர் காற்றினால் அடித்துச்செல்லப்பட்டு உயிரிழந்தார்.சுமார் 27 ஆயிரம் வீடுகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டதோடு, 120 குடும்பங்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளன.

முரோட்டோ பிராந்தியத்தில் கடலலைகள் மிகவும் உயரத்துக்கு எழுந்தன. ஜப்பானின் வடகிழக்குப் பகுதி நோக்கி மணிக்கு 50 கிலோ மீற்றர் வேகத்தில் புயற்காற்று நகர்ந்து கொண்டிருக்கிறது. இதனால் மணிக்கு 126 கிலோ மீற்றர் வேகத்தில் காற்றும் கடும் மழையும் பெய்கிறது.

ஜப்பானின் விமான சேவை உட்பட சகல போக்குவரத்தும் ஸ்தம்பிதமடைந்துள்ளன. இன்று இப்புயல் ஜப்பானைக் கடந்து கடற்பகுதியில் பிரவேசிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (யே)

# தீவிரவாதிகளின் நிபந்தனையை தென்கொரிய அரசு நிராகரித்தது

(சியோல்)

நேற்று முன்தினம் அவசரமாகக் கூட்டப்பட்ட வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளின் கூட்டமொன்றை அடுத்து



ஆயுததாரிகளின் வேண்டுகோளைத் தென்கொரிய அரசாங்கம் நிராகரித்தது.

24 மணிநேரத்தில் தென கொரியப் படைகளை வாபஸ் பெறவேண்டும் இல்லையேல் 33வயதான கிம் தலை வெட்டப்படுவார் என்று தீவிரவாதிகள் அறிவித்திருந்தனர். காலக்கெடு ஏற்கனவே முடிந்துவிட்ட நிலையிலும் தென்கொரியா விஷேட அதிகாரிகள் குழு ஒன்றைத் ஜோர்தானுக்கு அனுப்பி யுள்ளது.

இதேவேளை விஷேட அதிரடிப் படையணி ஒன்றையும் கிம்-சுன் இல்லை மீட்பதற்காக அந்நாடு அமைததுள்ளது. ஆனால் இதுபற்றி மேலதிகத் தகவல்களை வழங்க உதவி வெளிவிவகார அமைச்சர் மறுத்துவிட்டார். ஆயுததாரிகளின் அச்சுறுத்தலுக்கு தலைவணங்காத தென் கொரியா 3,600மேலதிகத் துருப்புக்களை ஈராக்கிற்கு அனுப்பும் பணியை ஆரம்பித்துள்ளது. இதன்மூலம் அமெரிக்கா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக அதிக படைகளை ஈராக்கில் நிறுத்தும் நாடாகத் தென்கொரியா விளங்கும். (யே)

# ஈராக்கில் அமெரிக்கர் பலி

(பக்தாத்)

ஈராக்கின் ரமாதி நகரில் ஆயுததாரிகள் மேற்கொண்ட குண்டுத் தாக்குதலில் ஐந்து அமெரிக்கப் படைவீரர்கள் கொல்லப்பட்டனர். இவர்களில் நால்வர் மரின் பிரிவைச் சேர்ந்தவர்கள். இது தவிர ஏழு ஈராக்கியரும் இதில் கொல்லப்பட்டனர்.

ஈராக்கின் நிர்வாகத்தை ஈராக்கியர்களிடமே கையளிக்க இன்னும் எட்டு நாட்களே மீதமிருக்கும் இவ்வேளையில், இடம் பெற்றுள்ள இத்தாக்குதலையடுத்துக் குறிப்பிட்ட பிரதேசத்திலுள்ள குடும்பங்களுக்கு அமெரிக்க இராணுவம் செய்தி யொன்றை அனுப்பியுள்ளது. இதனைத் தொடர்ந்து அங்கு தேடுதல்கள் மேற்கெள்ளப்பட்டுள்ளது .

வழமையான ரோந்துப் பணிகளுக்குச் சென்ற வீரர்கள் திரும்பாமையால் உடனடியாக ஸ்தலத்திற்கு விரைந்த அமெரிக்க மேலதிகப படையினர் கொல்லப்பட்டவீரர்களின் உடலை வீதி யோரத்தில் இருந்து மீட்டதாக பிரிகேடியர் ஜெனரல் மார்க் கிம்மிற் தெரிவித்தார். (யே)

# செச்சினிய தீவிரவாதிகளை ரஷ்ய வீரர்கள் விரட்டினர்

(மொஸ்கோ)

ரஷ்யாவின் தென்பிராந்திய தல்லநகரான இங்கஷேஷியாவின் மூன்று நகரங்களைக் கைப்பற்றும் நோக்குடன் செச்சினியத் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலை அரச படைகள் முறியடித்துள்ளதாக உள்துறை அமைச்சு அறிவித்துள்ளது.



நஸ்ரன், கரபுல்கா மற்றும் ஸலெப்ற் சோவ்ஸ்க் ஆகிய நகரங்களிலுள்ள அரச கட்டடங்களைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரு முகமாக நேற்று முன்தினமிரவு செச்சினிய தீவிரவாதிகள் தாககுதலை மேற்கொண்டனர். இதனால் அரச கட்டடங்களுக்குப் பாரிய சேதங்கள ஏற்பட்டதோடு, இஸ்காப் நகரின் தற்காலிக உள்துறை அமைச்சர் இறந்துள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது. பொலிஸாரும்,பொதுமக்களும் தீவிரவாதிகளும் இதில் கொல்லப்பட்டுள்ளபோதும் இறந் தவர்களின் எண்ணிக்கை சரிவர அறிவிக்கப்படவில்லை என்று ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சர் அறிவித்துள்ளார். (யே)




# போதைப் பொருள் கண்டுபிடிப்பு

(சிட்னி)

சுமார் 47மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான போதைப்பொருளை அவுஸ்திரேலிய சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

அவுஸ்திரேலியாவில் கைப்பற்றப்பட்ட மிகப்பெரிய போதைப்பொருள் இதுவாகும். கொன்டெயினர்கறில் பொதி செய்து அடைக்கப்பட்டுக் கொண்டுவரப்பட்ட இப்போதைப் பொருள் தொடர்பில் நால்வரைப் பொலிஸார் கைது செய்து விளக்கமறியலில் வைத்துள்ளதாக அவுஸ்திரேலிய நீதியமைச்சர் செனட்டர் கிறிஸ் எலிசன் அறிவித்துள்ளார்.

நாட்டை விட்டு ஹொங் கொங் தப்பிச் செல்வதற்காக விமான நிலையத்தில் காத்திருந்தபோது சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

(யே)

# விண்வெளியில் முதலில் பயணித்த தனியார் விண்வெளி விமானம்

(கலிபோர்னியா )


பூமியிலிருந்து 100 கிலோமீற்றருக்கு அப்பால் (65.5மைல்கள்) விண்வெளியின் எல்லைப்பகுதி என்று சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட பிரதேசத்தில் பறந்த முதலாவது தனியார் விண்வெளி விமானம் ஒன்று நேற்றுமுன்தினம் பாதுகாப்பாக கலிபோர்னியாவின் லொஸ் ஏஞ்சல்ஸ் பிரதேசத்திலுள்ள மஜாவ் விமானத் தளத்தில் வந்திறங்கியது.




மைக் மெல்வில் எனும் விமானியே இச் சாதனையை நிகழ்த்தினார். 62மைல் உயரத்திலிருந்து பூமியைப் பார்த்தபோது தனக்கு ஒரு வித தெய்வீக அனுபவம் ஏற்பட்டதாகத் தெரிவித்த மெல்வில் ,பூமியின் வளைவு நெளிவு கள மிக அற்புதமாக விளங்கியதாகக் குறிப்பிட்டார்.

லொஸ் ஏஞ் சல்ஸ





கடற்கரைகளுக் கப்பாலுள்ள தீவுகளைத் தான் அவதானிக்க முடிந் ததாகவும், பூமியின் நிறமமங்கலாகத் தெரிந்த தாகவும் கூறிய மெல்வில் இயந்திரத்தின் கட் டுப்பாட்டுப் பகுதியில் ஏற்பட்ட கோளாறுகள் காரண மாகத் தனது பயணத்தைச் சுருக்க வேண்டி ஏற்பட்டதாகவும் கூறினார்

100கிலோமீற்றர் தூரத்தைக் கடந்ததும், அங்கிலிருந்த ஒரு மெழுகு வர்த்தியை எடுத்துக கீழே போட்ட் பொழுது அது அந்தரத்தில் மிதந்ததாகவும் மெல்வில் கூறினார். வரலாற்றில் தனது பெயரும் இடம்பிடித்ததையிட்டுத் தாம் மகிழ்ச்சியடைவதாகவும் அவர் தெரிவித்தார்.

(யே)

எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின் - குறள்

வலம்புரி

## யாழ்.பல்கலைக் கழக மாணவர்களும் முன்மாதிரியாகச் செயற்படட்டும்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஊழியர்களின் வேலைநிறுத்தம் ஒரு தொடர் கதையாக நீண்டு சென்ற வேளையில் இதற்குத் தீர்வு காண்பதற்கு யாருமே முன்வரமாட்டார்களா எனப் பொதுசன எதிர்பார்ப்பு ஏற்பட்டிருந்தது.

இந் நிலையில், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கமும், மாணவர் ஒன்றியமும் இது விடயத்தில் ஒரு சமரசத் தீர்வைக் காண எடுத்த நடவடிக்கை மனதிற்கு ஆறுதல் தருவதாகவுள்ளது.

துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸுடன் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளும் மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளும் நடத்திய பேச்சுக்கள் ஓரளவு வெற்றிகண்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர்களின் வேலை நிறுத்தத்தால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதை அந்த மாணவர்களே உணர்ந்து கொண்டமை உண்மையில் பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

வழமையில் வேலை நிறுத்தம் நடைபெறுகின்ற போது பல்கலைக்கழக மாணவர்கள் தமக்கும் அதற்கும் எதுவித தொடர்பும் இல்லை என்பது போல் தங்கள் பாட்டில் இருப்பதே வழமை. ஆனால், இம்முறை வழமைக்கு மாறாக அட! ஊழியர்களின் வேலைநிறுத்தத்தால் எமது கல்வியல்லவா பாதிப்படைகின்றது என அவர்கள் விழித்தெழுந்தமை அதிசயமான உண்மை.

இந்த உண்மையை நம்ப முடியாதவர்கள் பல்கலைக் கழக பாடவிதானங்களில் அண்மையில் ஏதேனும் மாற்றம் செய்யப்பட்டதா? என்ற கேள்வியை எழுப்பியுள்ளனர்.

எதுவாயினும் பல்கலைக் கழகங்களில் எவரால், எந்த வடிவங்களில் வேலை நிறுத்தங்கள் நடைபெற்றாலும் அதன் முழுமையான பாதிப்பும் மாணவர்களுக்கே உண்டென்பதை மாணவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

பல்கலைக் கழகம் என்பது மாணவர்களுக்குரியது. அங்கு ஊழியர்களோ அன்றி விரிவுரையாளர்களோ பகிஷ்கரிப்பில் ஈடுபடுவதற்கு மாணவர்கள் ஆதரவு வழங்குவது எவ்வகையிலும் நியாயமானதாகாது.

பல்கலைக் கழக ஊழியர்களைப் பொறுத்தவரை அவர்கள் பணியாளர்கள். வேதனம் பெற்றுத் தமது பணியை ஆற்றுபவர்கள். அரச சட்டப் பிரமாணங்களுக்கு அமைவாக நியமனம் பெற்றவர்கள்; அவ்வாறு அரச சேவையாளர்களாக நியமனம் பெற்றவர்கள தமது கடமையை செவ்வனே செய்ய வேண்டியது அவர்களின் கடமை.

ஆனால், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் ஊழியர்களின் வேலை நிறுத்தம் மாதம் ஒரு தடவையாகிவிட்டது. இவ்வாறு ஊழியர்கள் துணிந்து- வேலைக்குப் பயமின்றி வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகின்றார்கள் எனில் அதற்குக் காரணம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கற்கின்ற மாணவர்களே என்பது மறுக்க முடியாத உண்மை. இந்தக் காரணத்தை இரண்டு வகையில் நோக்க முடியும்.

ஒன்று பல்கலைக்கழக மாணவர்கள் எடுத்ததற்கெல்லாம் விரிவுரைகளைப் பகிஷ்கரித்ததனால், அது ஒரு போராட்ட வழிமுறையாக ஊழியர்களுக்கும், உணர்த்தப்பட்டது.

குறிப்பாக மாணவர்கள் தமது வேலைநிறுத்தத்தின் போது துணை வேந்தரின் அறையைப் பூட்டுதல், நிர்வாக அறையைப் பூட்டி ஸ்தம்பிதம் அடையச் செய்தல், இதற்கு மேலாக எந்தப் புத்திஜீவியாலும் அனுமதிக்க முடியாதவாறு துணை வேந்தரின் காரைப் பூட்டி வைத்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.

இதனைப் பார்த்திருந்த பல்கலைக் கழக ஊழியர்களும் மாணவர்களின் அதேபாணியில் தமது போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இது ஒரு காரணம்; மற்றையது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் தமது கல்வி பாதிக்கப்படுவதாகச் சிந்திப்பதில் நேரத்தைச் செலவிடமாட்டார்கள் என்ற உண்மையை ஊழியர்கள் உணர்ந்திருந்தமை. இதனாலேயே ஊழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டம் சர்வசாதாரணமாக நடைபெறுகின்றது. இதற்கு முடிவுகட்ட வேண்டுமாயின் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் முன்மாதிரியாக நடந்து காட்ட வேண்டும்.

# திட்டமிட்ட கொள்கை வகுப்பின்றி முன்பள்ளிகள் இயங்கி வருகின்றன

## சுரேஸ் பிறேமச்சந்திரன் எம்.பி. கவலை

(கோப்பாய்)

திட்டமிட்ட கொள்கை வகுப்பற்ற நிலையில் முன்பள்ளிகள் வடக்கு-கிழக்கில் மட்டுமல்லாமல் இலங்கை முழுவதும் இயங்கிக்கொண்டிருப்பது வேதனைக்குரியது. குறிப்பாக வலி.கிழக்குப் பகுதிகளில் 70இற்கும் மேற்பட்ட முன்பள்ளிகள் இந்த வகையில் தற்போது இயங்கிவருன்கின்றன என ஊரெழு கிழக்கு வளர்பிறை சனசமூக நிலையத்தின் முன்பள்ளி விளையாட்டுப்போட்டியில் கலந்துகெண்டு உரையாற்றிய யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த. சுரேஸ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

உலக நாடுகளில் உன்னதமாக இயங்கும் முன்பள்ளிகள் இங்கு சிறைக்கூடங்களைப்போன்று எதுவித வசதிகளும் அற்ற நிலையில் இயங்கி வருகின்றன.

காலையில் முன்பள்ளிகள் மாலையில் வாசிகசாலைகளாக மாறி வருகின்றன. தனியார் வீடுகளிலும், அடைக்கப்பட்ட கட்டடங்களிலும மிகுந்த சிரமங்களின் மத்தியில் அவை இயங்கி வருகின்றன.



குறிப்பிட்ட சில முன்பள்ளிகள் மாத்திரம் தொண்டு நிறுவனங்களின் அனுசரணையுடனும் பெற்றோர்களின் உதவியுடனும் நல்ல முறையில் இயங்கி வருகின்றன.

கருத்தரங்குகளை நடாத்துவதுடன் தமது கடமை முடிந்துவிட்டது என கல்வி, அரச திணைக்கள அதிகாரிகள் விலகிவிடுகின்றனர்.

எதிர்காலத்தில் நற்பிரஜைகளை உருவாக்குவதற்கு கலவி உலகின் ஆரம்பப் படியாக அமைவன முன்பள்ளிகளே. இங்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு அரசாங்கம் மட்டும் அல்ல சமூகமும் உரிய மதிப்பையும் கௌரவத்தையும் வழங்குவதன் மூலம் வளமான தரமான எதிர்காலச் சந்ததியினரை உருவாக்க முடியும். ஆனால் முன்பள்ளிகள் விடயத்தில் கல்வி அமைச்சும் பொருததமான தரமான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. இதன் காரணமாக மகிழ்சசியாக இயங்க வேண்டிய முன்பள்ளிகள் துன்பத்தின் மத்தியில் இயங்குகின்றன என்றார். (உ-79)

அரச ஊழியர்களுக்கான

## சீரான இடமாற்றக் கொள்கை அடுத்த ஆண்டு முதல் அமுல்

(கொழும்பு)

அடுத்த ஆண்டு முதல் அரசாங்க ஊழியர்களுக்கான சீரான இடமாற்றக்கொள்கை அமுல்செய்யப்படவுள்ளதாக பொது நிர்வாக அமைச்சர் அமரசிறி தொடங்கொட அறிவித்துள்ளார்.

மாகாண மட்டத்தில் இடமாற்ற சபைகளை நிறுவுவதற்கும் இடமாற்றக்கொள்கைகளின் விதிமுறைகளை கடுமையாக அமுல்செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் அமைச்சர் அமரசிறி தொடங்கொட கூறியுள்ளார்.

இடமாற்றத்தை எதிர்பார்த்திருக்கும் அரசாங்க ஊழியர்கள் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவேண்டும். அவ்வாறு இடமாற்றங்களைப் பெற்று ஊழியர்கள் வேலைத் தளங்களுக்கு சமுகமளிக்காது விட்டால் அவர்கள் வேலையை விட்டு விலகியவர்களாகவே கருதப்படுவார்கள்.

இதேவேளை,ஒரே இடத்தில் 5 ஆண்டுகளுக்கு மேலாகக் கடமையாற்றியவாகளுக்கே இடமாற்றம் வழங்கப்படும்.

இடமாற்றங்களில் அரசியல் தலையீடுகளை மட்டுப்படுத்துவதே அரசின் நோக்கம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-60,10)

## ஐரோ. பாராளுமன்றத்திற்கு இலங்கையர் தெரிவானார்

(கொழும்பு)

தென்கிழக்கு இங்கிலாந்தில் இருந்து ஐரோப்பியப் பாராளுமன்றத்திற்கு இலங்கையரான அரசியல்வாதி நிறஞ்சன் டி சில்வா தேவ ஆதித்யா தெரிவாகியுள்ளார். இவரின பதவிக்காலம் 5 வருடங்களை உள்ளடக்கியது.

தனது போட்டியாளரைவிட இவர் 6 இலட்சத்து 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகளால் பெரும்பான்மையைப பெற்றுள்ளார்.

இவர் 1992 முதல் 1997 வரை பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினராக விளங்கியவர். இதன்போது தென்கிழக்கு இங்கிலாந்தின் கிராமப்புற அபிவிருத்திக்குப் பணியாற்றியதே இவரது வெற்றிக்குக் காரணமாகும்.

தென்கிழக்கு இங்கிலாந்துப் பிரதேசம் உலகில் மிகவும் பணக்காரப் பிரதேசங்களில் ஒன்று. ஏனெனில் பிரிட்டிஷ் அரச குடும்பத்திற்குச் சொந்தமான வின்சர் அரண்மனை, டோவர் துறைமுக நகரம் என்பவற்றின் காரணமாக அதிகளவு உல்லாசப் பிரயாணிகள் இங்கு வருவது வழக்கம். இதைவிட உலகின் பிரபல பல்கலைக்கழகமான ஒக்ஸ்போட்டும் இங்குதான் உள்ளது.

இவர் 1999 இல் ஒரு இலட்சத்து 9 ஆயிரத்து 40 வாக்குகளையே பெற்றிருந்தார். அதனுடன் ஒப்பிடுகையில் இம்முறை அதிகப்படியான பெரும்பான்மையைப் பெற்றிருக்கிறார்.

தனது வெற்றி குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

உலகின் பணக்கார, அழகான கிராமமான தென்கிழக்கு இங்கிலாந்தில் இருந்து ஐரோப்பியப் பாராளுமன்றத்திற்கு மீண்டும் தெரிவுசெய்யப்பட்டதில் பெருமையடைவதாகவும் தனக்கு வாக்களித்த 7 மில்லியுன் வாக்காளர்களுக்கான சேவையை எதிர்வரும் 5 வருடங்களில் வழங்கி அவர்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்திசெய்வேன் என்றும் கூறியுள்ளார். (உ-6)

ௐ தினசரி தியானம்

**விவேகச் சிந்தனைகள்**

ஒவ்வோர் உயிரிலும் தெய்வீகத் தன்மை மறைந்திருக்கிறது. வெளியேயும் உள்ளேயும் இருக்கும் இயற்கையைக் கட்டுப்படுத்தி உள்ளே குடிகொண்டுள்ள இந்தத் தெய்வீகத் தன்மையை மலரும்படி செய்வதுதான் முடிவான இலட்சியமாகும்.

சுவாமி விவேகானந்தர்.

யாழ். மீனவர்கள்

## பூநகரியில் மீன்பிடிப்பதை தடைசெய்யக் கோரிக்கை

(சாவகச்சேரி)

யாழ்ப்பாண மீனவர்கள் பூநகரி கடற்பரப்பில் மீன்பிடித்தலைத் தடை செய்யுமாறு கிளிநொச்சி அரச அதிபர் மீன்பிடித்திணைக்கள ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பிறமாவட்ட மீனவர்கள் மற்றும் இந்திய மன்பிடி இழுவைப்படகுகள் என்பனவற்றின பிரவேசத்தால் பூநகா, நாச்சிக்குடா, வலைப்பாடு ஆகிய பிரதேச மனவர்கள் வெகுவாகப் பாதிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (உ-29)

ம.உ.ஆ.கு.

## யாழ். இணைப்பாளர் ருவான் இன்று அமெரிக்கா பயணம்

(யாழ்ப்பாணம்)


மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.இணைப்பாளர் ருவான சந்திரசேகர ஜனநாயகமும் சமஷ்டிமுறையும் தொடர்பான மாநாட்டில் கலந்துகொள்ளும் முகமாக இன்று அமெரிக்கா பயணமாகவுள்ளார்.

இதற்கான ஏற்பாடுகளை இலங்கை மனித உரிமை ஆணைக்குழு செய்துள்ளது. ருவான் சந்திரசேகரவிற்குப் பதிலாக இன்று வவுனியா பிராந்திய இணைப்பாளர் சகுந்தலா யாழ்ப்பாணத்தில் கடமையை ஏற்றுள்ளார். (உ-19)

## ம.ம.மு.தலைவர் சந்திரசேகரன் செயலாளர் பதவியையும் ஏற்றார்

(நுவரெலியா)

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பி.சந்திரசேகரன் கட்சியின் செயலாளர் பதவியினையும் தற்காலிகமாகப் பொறுப்பேற்றுள்ளார்.



எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் மலையக மக்கள் முன்னணியின் வேட்பாளர்களின் ஒழுக்கவரம்புகளைப் பேணவும் அதனை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவுமே இப்பதவியை அவர் கடந்தவாரம் முதல் ஏற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-4,61)

## வெங்காயத் திருட்டைப் பிடிக்க இதுவும் ஒரு வழி

(கோப்பாய்)

வெங்காயத்தினைக் கையில் ஏந்தியவாறு விவசாயி ஒருவர் வெங்காயத் திருடர்களைத் தேடும் நடவடிக்கையில் ஈடுபட்ட சம்பவம் ஒன்று திருநெல்வேலிச் சந்தையில் அண்மையில் நிகழ்ந்துள்ளது.

தனது தோட்டத்தில் பயிரிடப்பட்டிருந்த வெங்காயத்தை இரவோடிரவாகத் திருடர்கள் களவாடிச் சென்றதையடுத்தே திருடப்பட்டதை ஒத்த வெங்காயத்தைக் கையில் ஏந்தியவாறு கோப்பாய்ப் பகுதி விவசாயி ஒருவர் இவ்வாறு வெங்காய விற்பனைப் பகுதியில் தேடித் திருந்ததை அவதானிக்க முடிந்தது.

இருப்பினும் தனது களவாடப்பட்ட வெங்காயத்தை அங்கு

# மோட்டார் சைக்கிள் விபத்தில் காயம்

(துன்னாலை)

இரு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றை ஒன்று மோதியதில் வீதியால் மோட்டார் சைக்கிளை உருட்டிச் சென்ற வேறொரு நபர் காயமடைந்துள்ளார். இச் சம்பவம் நேற்றுக் காலை 10 மணியளவில் மந்திகை மருத்துவமனைக்கு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறையில் இருந்து யாழ். நோக்கி வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் யாழில் இருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் மந்திகை மருத்துவமனைக்கு அண்மையில் விபத்துக்குள்ளாகின. இவ்வேளை மோட்டார் சைக்கிள் பழுதடைந்த நிலையில அதனை அவ்வீதியால் உருட்டிச் செனறு கொண்டிருந்த வேறு நபரை, விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிள் மோதின. இதனால் அவர் படுகாயமடைந்து மந்திகை மருத்துவமனையல் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்சாரதியான மட்டுவிலைச் சேர்ந்த தம்பாப்பிள்ளை ஜெயராசா (வயது38) என்பவரே படுகாயமடைந்தவராவார். விபத்துக்குள்ளான 3 மோட்டார் சைக்கிள்களும் பலத்த சேதத்திற்குள்ளாகின.(ச-150)

## போக்குவரத்து...

றிதழ்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டது.

வாகனச் சான்றிதழ் இல்லாதவர்களுக்குக் குற்றப்பணம் அறவிடப்பட்டது. அத்துடன் சமாந்தரமாகச் சைக்கிளில் சென்றோரின் சைக்கிள்கள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டன. (ச)

## மரண...

என மேன்முறையீடு செய்திருந்தனர்.

இது தொடர்பிலான விசாரணைகள் இடம் பெற்றிருந்த நிலையிலேயே நேற்று சட்டமா அதிபரின் கருத்துக்கள் முன்வைக்கப்பட்ட போது ரத்நாயக்கா மீதான குற்றத்திற்கு நேரடியான ஆதாரங்கள் இல்லையென பிரதிவாதியின் சட்டத்தரணி வாதிட்டதையடுத்து இவர் விடுதலை செய்யப்பட்டார். (ச-121)

# எதிர்க்கட்சி தலைவர்கள் இன்று கூடுவர்

(கொழும்பு)

தற்போதைய பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் இன்று காலை 9.30 மணிக்குப் பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் கூடவுள்ளனர்.

பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையில் இந்த ஒன்றுகூடல் இடம்பெறவுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் இணைந்த எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பானது பாராளுமன்றத்தில் அண்மையில் நடைபெற்ற அசம்பாவிதங்களை ஆட்சேபித்து அறிக்கையொன்றினை சபாநாயகரிடம் கையளித்திருந்தன.

இதன் பின்னர் அடுத்தகட்டமாக மேற்கொள்ளப்படக் கூடிய நடவடிக்கைகளைத் தீர்மானிப்பதற்காகவே இந்த ஒன்று கூடல் இடம்பெறவுள்ளது.

(ச-121)

# கலைமலர் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் 'கலைமலர்' வருடாந்த சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று பி.ப.2மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை 'ரதிலஷ்மி' மண்டபத்தில் சஞ்சிகை ஆசிரியர் அகணேசராசா தலைமையில் இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக முதுபெரும்புலவர் வை.கா. சிற்றம்பலம் கலந்து கொள்ளவுள்ளார்.

ஆசியுரையை கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தியும் வாழ்த்துரையை கலாநிதி செ.திருநாவுக்கரசுவும் வெளியீட்டுரையை தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் அருட்திரு.சு.ஜெபநேசனும் நிகழ்த்தவுள்ளனர். நூல் ஆய்வுரையை எழுத்தாளர் தாமரைச்செல்வி ஆற்றவுள்ளார். (உ)

## ஜனாதிபதியை...

ளப்பட்டிருந்த போதிலும், ஜனாதிபதி பிரிட்டனுக்கான பயணத்தினை மேற்கொண்டிருந்தபோது, ரொனி பிளேயரை இலகுவாக சந்திக்க முடியாது என்று பிரிட்டன் வெளிவிவகார அமைச்சு தெரிவிததகாகக் கூறப்படுகின்றது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நாடு திரும்பியுள்ளார். (ச)

## கருணாவுக்கும்...

விரும்புவதால், தான் கருணாவிற்கு உதவுவதாகவும் அவர் மேலும் கூறினார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்தில் கேணல் கருணாவிற்கு பிரதான பங்கு இருந்தது. அது சகலருக்கும் தெரிந்த விடயம். விடுதலைப் புலிகளின் போராட்டத்தில் கருணாவின் பங்கு குறித்து விடுதலைப் புலிகள் தமது பிரசாரத்தில் விளக்கியிருந்தார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு பின்பு கருணா ஜனநாயக நீரோட்டத்திற்கு வருவதற்கு விருப்பம் தெரிவித திருந்தார். இந் நிலையில் அவரை ஜனநாயக நீரோட்டத்திற்குக் கொண்டு வருவதற்காக அவருடன் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தேன்.

இந்நிலையில் பாதுகாப்புக் காரணங்களுக்காக அவர் எங்கிருக்கிறார் என்பதை நான் அறிய முயலவில்லை. ஆனால் அவர் தற்போது இலங்கையில் தான் இருக்கிறார் என்று தான் நம்புவதாகவும் அப் பேட்டியில் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.(ச)

# இன்று கொடியேற்றம்

(பொன்னாலை)

கைதடி கயற்ற சித்தி கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை கொடியேற்றததுடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 1ஆம், 2ஆம் திகதிகளில் முறையே தேர்,தீர்த்தத்திருவிழாக்கள் நடைபெறவுள்ளன.(உ-4[illegible])

★ ★

(கோப்பாய்)

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும். எதிர்வரும் முதலாம் திகதி தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளது. (உ-74)

★ ★

(பொன்னாலை)

கரவெட்டி தச்சன்தோப்பு சிந்தாமணி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை கொடியேற்றததுடன் ஆரம்பமாகவுளளது.

பத்துத் தினங்கள் இடம் பெறவுள்ள இவ் உற்சவத்தில் முதலாம், இரண்டாம் திகதிகளில் தேர்த்திருவிழாவும் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.(உ-[illegible])

## சந்தேக...

ஆர்.எச்.தஸநாயக்கா, கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் குமாரவேல் தம்பையா மற்றும் ஐயாத்துரை நடேசன் ஆகியோரது படுகொலைகள் தொடர்பாகவும் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் இரத்தினம் மௌனகுருசாமி மீதான கொலை முயற்சி தொடர்பாகவும் இந்த அடையாள அணிவகுப்பு நடைபெற்றது.

மட்டக்களப்புப் பொலிஸார் சமர்ப்பித்திருந்த விசேட அறிக்கை ஒன்றின்பிரகாரம் பதில் நீதிபதி கா.தங்கவடிவேல் முன்னிலையில் இந்த அடையாள அணிவகுப்பு நடைபெற்றது.

இவ் அணிவகுப்பில் கடந்த 8ஆம் திகதி வாழைச்சேனைப் பிரதேசத்தில் கைத்துப்பாக்கி மற்றும் கைக்குண்டுடன் கைது செய்யப்பட்ட கிருஷ்ணபிள்ளை ரமேஷ் குமார், கணேசன் சுதர்சன் ஆகியோரும் ரி-56 ரக துப்பாக்கி ரவையுடன் கைது செய்யப்பட்ட மாமாங்கம் இளங்கோ என்ற இளைஞரும் ஆஜர் செய்யப்பட்டிருந்தார்கள்.

குறிப்பிட்ட 9 சாட்சிகளில் எவரும் சந்தேக நபர்களை அடையாளம் காட்டவில்லை. இதனையடுத்து நீதிபதி எம்.எச்.எம்.அஜ்மீர் இரு சந்தேக நபர்களை எதிர்வரும் 30[illegible] வரையிலும் ஒரு சந்தேக நப[illegible] இன்று வரையும் விளக்க மறியலில் தொடர்ந்து வைக்குமாறு உத்தரவிட்டார். (ச)

# எதிர்ப்பு அரசியலை...

ஒழுக்காற்று நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

பாரதூரமான சர்வதேச பொருளாதாரக் காரணிகள் நாட்டைப் பாதித்துள்மை தொடர்பாகப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அறிந்திருப்பதாகத் தெரியவில்லை.

சர்வதேச ரீதியில் தற்போதைய ஈராக் நிலைபரம் மற்றும் பல காரணங்களினால் எண்ணெய் விலை அதிகரித்துள்ளது. இந் நிலைமை விரைவில் மாறும் சாத்தியமும் தென்படவில்லை. இந் நிலையில் அரசாங்கம் சீராகச் செயற்படக் கூடிய நிலையில் சிறந்த பொருளாதாரக் கொள்கையொன்றை வகுத்து அது தொடர்பாக மக்களுக்கு அறிவிப்பதே சிறந்ததாகும்.

நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.இதற்குப் பாராளுமன்றம சீரான சட்டவாக்க சபையாகச் செயற்படுவது அவசியமாகும்.

தறபோது முக்கியமான அரச பதவிகளின் தராதரமும் அனுபவமும் உள்ளவர்களை அரசு நியமிதது வருவதைப் பாராட்டும் அதே வேளை ஏனைய அரச வெற்றிடங்களுக்கு உயர் தகுதி வாய்ந்தவர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வர்த்தக கைத்தொழில் கூட்டு மன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது.(வ)

# விஜயகுமாரதுங்கவின் உருவச்சிலை நிறுவ ஜனாதிபதி அனுமதி

(யாழ்ப்பாணம்)

விஜயகுமாரதுங்கவின் உருவச்சிலையை யாழ்.மத்திய பஸ் தரிப்பு நிலையம் முன்பாகவும், அல்பிரட் துரையப்பாவின் உருவச்சிலையை துரையப்பா விளையாட்டு அரங்கிலும் நிறுவுவதற்கான அனுமதியை ஜனாதிபதி தமக்கு வழங்கியிருப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். கிளையின் இணைப்புச் செயலாளர் த.தேவகுலநாயகம் தெரிவித்துள்ளார். (உ)

## எதிர்க்..

ஒன்றை ஏற்படுத்துவது அவசியமாகும்.

இத்தகைய இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு இரண்டு பிரதான கட்சிகளுக்கும் ஆலோசனை கூறி சமாதானத்தின் முக்கியத்துவம் தொடர்பாக அவர்களுக்கு விளக்கம் அளிக்க வேண்டுமென்று புதிய மகாநாயக்கரை ரவூப் ஹக்கீம் கேட்டுக் கொண்டார்.

'இந்நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பில் தமிழீழ விடுதலைப் புலிகளும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் நடந்து கொள்ள வேண்டுமென்றும் ரவூப் ஹக்கீம் விடுதலைப் புலிகளிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ம-121)

## ஊழியர்களின்...

மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை வழமைபோல் சுமூகமான நிலையில் நடைபெற வேண்டும் என்பதற்காகவே தாம் நேற்று ஒருநாள் அடையாள பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.செல்வகுமார் தெரிவித்தார்.

இனிவரும் காலங்களில் இவ்வாறான வேலை நிறுத்தப் போராட்டத்தில் தாம் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப் போவதில்லையெனவும் இதனால் மாணவர் சமூகமே பாதிக்கப்படுவதாகவும் அவர் கூறி[illegible].

எதிர்வரும் 28ஆம் திகதி[illegible] முன்னர் ஊழியர் சங்கத்தினது கோரிக்கைகளைத் தீர்த்து வைப்பதற்கு நிர்வாகம் தவறினால் பாரதூரமான நடவடிக்கையில் ஈடுபடுவோம் எனக் கூறினார். மேலும் ஆசிரியர் சங்கத்தினதும், மாணவர் ஒன்றியச் சந்திப்பின் பயனாக இனிவரும் காலங்களில் இப்படியான பிரச்சினைகளை சுமூகமான முறையில் பேசித் தீர்த்துவைப்பதற்கென ஒரு குழு அமைப்பதற்கு முடிபு செய்யப்பட்டுள்ளது. இக் குழுவில் துணைவேந்தரும், ஆசிரியர் சங்க உறுப்பினர்கள் இருவரும் ஊழியர் சங்க உறுப்பினர் இருவரும் மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் இருவரும் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவரும் அடங்குவர். (ச-19)


# உடன் தேவை

## சிற்றூழியர்கள்

## (இரவுக்கடமை)

**24-06-2004 வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நேரில் வரவும்**

குறிப்பு: நிறுவனத்தை அண்மித்து இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வலம்புரி,
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்

**நிர்வாக உத்தியோகத்தர்.**

